கோகுலம்

GOKULAM

ஏப்ரல் '99 ரூ. 6/-



நம் இருவரைப் பற்றி ஒரு அற்புதமான விஷயம் உள்ளது.

உண்மையில் நாங்கள் ஒருவரே.



அந்த மழலைச் செல்வம் தான் உங்கள் உலகம். அவனுக்குத் தாருங்கள் ஒரு அன்பளிப்பை. அதை வாஞ்சையுடன் போற்றி மகிழ்வான் என்றென்றும்.

சில்ட்ரன்ஸ் கிஃப்ட் குரோத் ஃபண்ட்.

உங்களின் ஒரு அங்கமே உங்கள் மழலைச் செல்வம். அவனது அங்கத்தில் நீங்களும் ஒன்றாகத் திகழ்கிறீர்கள். இந்த பந்தத்தைக் கொண்டாட அவனுக்கு யூடிஐ-ன் சில்ட்ரன்ஸ் கிஃப்ட் குரோத் ஃபண்டை அன்பளிப்பாகத் தாருங்கள். 15 வயதிற்குட்பட்ட எந்த ஒரு குழந்தைக்கும் ஆண்டிற்கு 12 % உறுதிப்படுத்தப்பட்ட வருவாய். வருவாய் தானாகவே மறுமுதலீடு செய்யப்படும். முதலீடு செய்யப்பட்ட ரூ.10,000 வளர்ந்து 21 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ரூ.1,08,000 ஆகிறது. குறைந்தபட்சம் முதலீடு ரூ 2,000. உச்ச வரம்பு கிடையாது. மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள யூடிஐ கிளையை, முக்கிய பிரதிநிதியை அல்லது முகவரை அணுகவும். உங்கள் குழந்தையின் எதிர்காலம் உங்கள் கையில். இப்பொழுதே அதைப் பத்திரப்படுத்துங்கள்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் வளமான நாளைக்கு

இப்போது : திட்டம் விற்பனைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது

[illegible]

மண்டல அலுவலகம் : 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன் : 517101. **கிளை அலுவலகம்** : கோயம்புத்தூர் போன் : 214973. சென்னை போன் : 517101, 517190 மதுரை போன் : 738186 திருச்சி போன் : 760060

SAATCHI & SAATCHI - 00959 C TAM B

கோகுலம்

ஏப்ரல் '99

மலர் : 17 ● இதழ் : 3




அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

அமரர் 'கல்கி' அவர்களுடைய நூற்றாண்டு இது என்பதை ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். 1899ல் அவர் பிறந்த குக்கிராமமான புத்தமங்கலத்துக்கு அண்மையில் சென்றிருந்தோம். அவர் பிறந்த வீட்டின் திண்ணைச் சுவரில் ஒரு கருங்கல் பலகை நூற்றாண்டு நினைவாக பதிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவுச் சின்னத்தை தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் திறந்து வைத்தார். பல எழுத்தாளர்களும் இலக்கிய அன்பர்களும் வந்திருந்தனர்.

வறுமை மிக்க குடும்பத்தில் பிறந்த கிருஷ்ணமூர்த்தி, பள்ளியில் சேர்ந்து படிப்பதற்குக் கூட வசதியில்லாமல்தான் இருந்தார். உறவினர் ஒருவர் உதவியோடு திருச்சி சென்று படிக்க ஆரம்பித்தபோது விடுதலைப் போராட்டத்தின் வேகம் அவரை இழுத்துக் கொண்டு போய்விட்டது! பள்ளிப் படிப்பைக் கூட அவர் முடிக்கவில்லை.

சந்தர்ப்பச் சூழ்நிலை எப்படியிருந்தாலும் ஆர்வமும் முயற்சியும் இருந்தால் எண்ணியதைச் சாதிக்கலாம்; அதற்கும் அதிகமாகவே கூட சாதனைகள் புரியலாம் என்பதற்குக் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

முன்னேற வேண்டும் என்பதற்காக 'கல்கி' எந்த ஒரு நேரத்திலும் குறுக்கு வழி எதையும் கையாண்டதில்லை என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு செயலையும் 'இது தேச நலனுக்கு உகந்ததா' என்று எடை போட்டுப் பார்த்து நிறைவேற்றிய நேர்மையாளர் அவர்.



அவருடைய தேசபக்தி, விடுதலைப் போராட்டத்தில் அவரை ஈடுபடவைத்தது. அதே தேசபக்திதான் சமுதாய முன்னேற்றத்துக்கும் சீர்திருத்தத்துக்கும் உதவும் வகையில் கதைகள், கட்டுரைகள், நாவல்கள், கவிதைகள் என்று பல வற்றையும் எழுதிக் குவிக்கச் செய்தது.

மத்திய அரசு, 'கல்கி' நூற்றாண்டினையொட்டி, அவர் நினைவாக தபால்தலை வெளியிட முடிவு செய்கிற அளவுக்குக் 'கல்கி', சிறந்த எழுத்தாளராகவும் தேச பக்தராகவும் சமுதாய சீர்திருத்தங்களுக்காகப் பாடுபட்ட சமூகத் தொண்டராகவும் திகழ்ந்தார்.

அமரர் 'கல்கி' அவர்களுடைய கதைகள், நாவல்கள் போன்ற எதையும் குழந்தைகளும் படித்து மகிழலாம், பரவசமடையலாம். அப்படி எளிய நடையில், உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய சரித்திர, சமூக நாவல்களை அவர் எழுதினார். இன்றைய குழந்தைகள்தான் நாளை நாட்டின் தலைவர்கள் என்பதை உணர்ந்து, பொறுப்புணர்வுடன் எழுதினார். அதனால்தான் அமரர் 'கல்கி' அவர்களுடைய நூற்றாண்டை பள்ளிக் கூடங்களில் கூட கொண்டாடுகிறார்கள்.

மேட்டூர் அணையில் உள்ள வைத்தீசுவரா மேல் நிலைப்பள்ளி ஆண்டு தோறும் பாவை விழா நடத்துகிறது. இந்த ஆண்டு அது அமரர் 'கல்கி' நூற்றாண்டு விழாவாகவும் கொண்டாடப்பட்டது. செல்வன் நாகராஜன்(படம்), செல்வி பிரேமலதா ஆகியோர் 'கல்கி' அவர்களைப் பற்றி பேசினார்கள்.

நீங்கள் கூட அவருடைய ஒரு புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்து விட்டால்போதும், பிறகு கதைக்குக் கதை, நாவலுக்கு நாவல் தாவி, ஆர்வத்துடன் அவற்றைக் கரைத்துக் குடிக்கத் தொடங்கி விடுவீர்கள்!

உங்கள் பெற்றோர் கண்ணில் பட்டு விட்டால்தான் ஆபத்து. அவர்கள் படித்து முடித்த பிறகுதான் உங்களுக்குப் புத்தகம் கிடைக்கும்!

அன்புடன்


இ. ராஜேந்திரன்,
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

கோகுலம்
ஏப்ரல் 1999

இந்த இதழில்...







வண்ண மீன்களை வளர்க்கலாம்!

தபால் தலை சேகரிப்பு, பிராணிகள் வளர்ப்பு, நாணயங்கள் சேகரிப்பு... இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொழுதுபோக்கு உண்டு. அத்தகைய பொழுதுபோக்குகளில் வண்ண மீன்களை வீட்டில் வளர்ப்பதும் ஒன்று.

பண்டைக் காலத்திலிருந்தே ஜப்பானியர்களும் சீனர்களும் வண்ண மீன்களை தொட்டிகளில் வளர்த்திருக்கிறார்கள்.

1853- ஆம் ஆண்டுதான் பொது மீன் காட்சி சாலை லண்டனில் அமைக்கப்பட்டது. இன்று ஜெர்மனி, போர்ச்சுகல், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் புகழ்பெற்ற மீன் காட்சி சாலைகள் உள்ளன. தமிழ் நாட்டில் சென்னை கடற்கரையில் மீன் காட்சி சாலை உள்ளது. இதில் அழகான, விசித்திர மீன்கள் மற்றும் அரிய கடல்வாழ் உயிரினங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வண்ண மீன்களை வளர்க்க உங்களுக்கும் ஆசையா?

மீன்களை வளர்க்க உதவும் மீன் தொட்டிகள் பல்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் கிடைக்கின்றன. மீன் தொட்டிக்கு, மேல் மூடியும் அவசியம். அப்போதுதான் தூசி சேராது. பூச்சி, புழுக்கள் தொட்டிக்குள் விழாது.

வீட்டிலிருக்கும் தொட்டிகளைப் பயன்படுத்தினால் தொட்டியின் ஆழம், அகலம் ஒன்றாகவும் நீளம் இதைப் போல் இரு மடங்கு கொண்டதாகவும் இருக்க வேண்டும். கடையில் வாங்கிய தொட்டியாக இருந்தால் நன்றாகக் கழுவிய பிறகே பயன்படுத்த வேண்டும்.

தொட்டியில் எப்போதும் அதிக தண்ணீரை ஊற்றக் கூடாது. தண்ணீர் அதிகமானால் தொட்டி எடை தாங்காமல் உடைந்து விடக்கூடும்.

தொட்டியின் அடியில் நன்றாக சுத்தம் செய்த மணலை மூன்று செ.மீ. உயரம் வரை பரப்பலாம். அதற்கு மேல் சரளைக் கற்களைப் போட்டால் பார்க்க அழகாக இருக்கும்.

தொட்டியில் நீர்த் தாவரங்கள் சிலவற்றை அவசியம் வளர்க்க வேண்டும். இவை மீனின் கழிவுகளைக் கட்டுப்படுத்தி,



ஆரோக்கிய சூழ்நிலையை உருவாக்கும்.

மீன் தொட்டியை வெளிச்சம் வரும் இடத்திலோ அல்லது அதிக ஒளி தரும் மின்சார விளக்குகளைப் பொருத்தியோ வைக்க வேண்டும். அப்போதுதான் தாவரங்கள் ஆக்ஸிஜனை வெளியேற்றும்.

தொட்டிக்குள் தண்ணீரை ஊற்றும் போது மெதுவாக ஊற்ற வேண்டும். இல்லையென்றால் மீன்கள் வீணாக பீதியடையும். சரளைக் கற்களும் சிதைந்து போகும்.

மீன்களை வளர்க்க ஆற்று நீர் அல்லது கிணற்று நீரைத்தான் பயன்படுத்த வேண்டும். குளோரின் கலந்த நீரைக் கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது.

கண்கவர் வண்ண மீன்கள் கடைகளில் கிடைக்கின்றன. முதலில் விலை குறைந்த மீன்களை வாங்கி வளர்க்க ஆரம்பிக்கலாம். மீன் வளர்ப்பு பழக்கமான பிறகு விலை மிகுந்த மீன்களை வளர்க்கலாம். முரட்டுக் குணம் கொண்ட மீனையும் சாது மீனையும் ஒரே தொட்டியில் வளர்க்கக் கூடாது.

மீன்களுக்கென்று உணவுகள் கடைகளில் விற்கப்படுகின்றன. அவற்றை வாங்கி சிறிது சிறிதாகக் கொடுக்கலாம். உணவு அதிகம் போட்டாலும் ஆபத்து.

மீன் வளர்ப்பு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். குட்டித் தம்பி, தங்கைகள் பார்த்துப் பார்த்து ஆனந்தமடைவார்கள்!

— எஸ். சித்ரா

அட்டையில்: **மதுபாலா**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

சாதனைச் சிறுவர்கள்!

தீபன் சக்கரவர்த்தி வீட்டிற்குள் நுழைந்தால் ஏதோ பரிசுக் கோப்பைகள் விற்கும் கடைக்குள் நுழைந்து விட்டோமோ என்று தோன்றும். எல்லாம் தீபன் தேசிய, மாநில அளவில் செஸ் போட்டிகளில் பங்கேற்று குவித்துள்ள கோப்பைகள் தான். பத்து வயதான தீபன் சென்ற மே மாதம் ஈரான் நாட்டில் போய் விளையாடிவிட்டு வந்திருக்கிறான். தீபனின் ஆறு வயது தங்கை சூர்யாவும் அண்ணனுக்கு ஈடாகப் பரிசுகள் வாங்கியிருக்கிறாள். அதே போல் தீபனின் மாமா பெண்கள் ராஜதர்ஷினியும் ப்ரியதர்ஷினியும் செஸ் போட்டிகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர்.


இவர்கள் நால்வரும் செஸ் உலகில் மிகப் பெரும் சாதனையாளர்களாக வர வாழ்த்துவோம்.

– ஈரன் நியூஸ் பழ. சேதுராமன்




விளையாட்டுகளில் பங்கேற்று சாதனை படைப்பது மட்டும் தான் சாதனையா? தலைகீழாக நடப்பது, சாப்பாட்டு போட்டியில் அதிக இட்லிகளைச் சாப்பிட்டது, நீண்ட தூரம் ஓடியது, பல குரல்களில் பேசியது இப்படி எத்தனையோ சாதனைகளை நீங்கள் செய்திருக்கலாம். உங்களது சாதனைகளை புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த சாதனைகள் கோகுலத்தில் பிரசுரிக்கப்படும்.


கணக்கு மிஷின்!
கதை: பா. கவிதா
படம்:
என்னடா வினித், கணக்குப் போடறேன்னு சொல்லிட்டு எதோ மிஷினை வச்சி விளையாடறே?
இது கால்குலேட்டர் பாட்டி...
இதை வச்சு சுலபமா-சீக்கிரமா கணக்குப் போட்டு முடிச்சுடலாம்!
எல்லா பசங்களும் இதை வச்சுத் தான் கணக்குப் போடறாங்களா?
ஸ்கூலுக்குக் கால்குலேட்டரைக் கொண்டு போகக் கூடாது..
அப்போ... உன் சோம்பேறித்தனத்துக்கு இதைப் பயன் படுத்துறியா?
பாடத்தை சீக்கிரமா முடிக்கலாமில்ல?
வீட்டுப்பாடம் தருவதே உனக்குப் பயிற்சி கொடுக்கத்தானடா?


உங்களுக்கு இதெல்லாம் புரியாது பாட்டி!
பரீட்சையிலே தடுமாறப் போறே, கவனம்!
வகுப்பில்~
என்னடா வினீத், இந்தக் கூட்டல் கணக்கை ரவி ஒரு நிமிடத்தில் பண்ணிட்டான்...
நீ அரைகுறையா விட்டிருக்கியே ?
எல்லாரும் இந்தப் பக்கத்திலுள்ள ஐந்து கணக்கையும் நாளைக்குச் செஞ்சுட்டு வரணும்.
சரி மிஸ்!
சரி மிஸ்!
ஓ... சரி!


என்னடா தலைல கை வச்சுட்டு உட்கார்ந்துட்டே?
அஞ்சு பெரிய கூட்டல் கணக்கு இருக்கு. கால்குலேட்டரில் பேட்டரி சரியில்லை! என்ன செய்யறது?
கூட்டல் சுலபம் தானேடா! கணக்கு மிஷின் எதுக்கு?
சரி நான் ஒவ்வொண்ணாச் சொல்றேன் கூட்டுங்க பாக்கலாம்!
ஒரு 300. அப்புறம் 215...
சரி 515!
ஒரு 115..
ம் 630..
ஒரு 400...
1030..!
ஒரு 290... அவ்வளவு தான்!
மொத்தம் 1320.. போதுமா!


எப்படி பாட்டி இப்படிப் பட், பட்டுன்னு கூட்டுறீங்க?
நான் படிச்சது எட்டாங் கிளாஸ் தான்... அந்தக் காலத் திலே இந்தக் கணக்கு மிஷினெல்லாம் கிடையாது...
அப்படியா?
நாங்களா எழுதிப் பயிற்சி செய்ததுதான்... வாழ்க்கை முழுவதும் மறக் காது!
நீங்க சொல்றது சரி பாட்டி! இந்தக் கால்குலேட்டரை அப்பாகிட்ட கொடுத்துடுறேன்!

பயிர்களை நாசம் செய்த குரங்குகள்!

குட்டைக் கொய்யா மரங்களில் கொத்துக் கொத்தாக ஆப்பிள் அளவு பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. அந்த மாணவர்கள் வேண்டிய மட்டும் பறித்துத் தின்றனர்.

"சரி, சரி அளவோடு சாப்பிடுங்க. அப்பதான் இளநீர் குடிக்கலாம்" என்றான் தோப்புக்காரரின் மகன் மணி.

அவர்கள் கொய்யாத் தோப்பை விட்டு அடுத்து தென்னந்தோப்புக்கு வந்தனர்.

பெரிய கிணற்றுக்கருகில் சதுரமான நீச்சல் தொட்டியிருந்தது. மோட்டார் தட்டி விட்டு தொட்டி நிறைந்ததும் அதில் நீந்தி விளையாடினார்கள்.

"சரி மணி, ஏதோ சொல்லணுமின்னியே என்ன?" என்று கேட்டான் அகிலன்.

"இந்தத் தோப்புக்கு அடுத்த வயல் எங்க வயல்தான். ஒரு வாரமா நித்தம் நாங்க நெல் நாத்து நட்டுட்டுப் போறோம், குரங்குக கூட்டமா வந்து நாத்துகளை பிடுங்கிப் போட்டுட்டு போயிருது. என்ன செய்யிறதுன்னு தெரியலே. எங்கப்பா வருத்தமா இருக்காரு. இப்ப நீங்க இதுக்கு ஏதேனும் ஆலோசனை சொல்லணும். அதுக்குதான் இன்னக்கி உங்களை தோப்புக்குக் கூட்டியாந்தேன்" என்றான் மணி.

"நீ என்ன செய்யலாமுன்னு நெனைக்கறே? முதல்ல அதைச் சொல்லு" என்றான் முருகன்.

"நான் கொஞ்சம் சோத்துல விஷம் கலந்து வச்சி குரங்குக் கூட்டத்தை அப்படியே கொல்லலாமான்னு நினைக்கிறேன்."

"மணி, குரங்குகளைக் கொல்றது பாவமுன்னு நினைக்கிறவங்க நாம்" என்றான் கண்ணன்.

"ஆமாம்பா! நாம அதுகளை ஆஞ்சநேயரா நெனைச்சி கும்பிடறோம்!" இது அமுதன்.

"அது சரிப்பா. அதனாலதான் எங்கப்பா பேசாம நஷ்டங்களை ஏத்துக்கிட்டு வருத்தமா உட்கார்ந்து இருக்காரு. இல்லேன்னா துப்பாக்கியால எல்லா குரங்குகளையும் சுட்டிருக்க மாட்டாரா?" என்றான் மணி.

"சரி, இப்ப என்னதான் செய்யிறது?"

"அதான் விஷம் வச்சி குரங்குகளைக் கொல்லணும். இதுதான் என் முடிவு. நாத்துகளை விலைக்கு வாங்கி நட, நட இதுகள் நாசம் பண்ணிக்கிட்டு இருந்தா பாத்துக்கிட்டு சும்மாவா இருக்குறது?" என்று வருந்தினான் மணி.

"நான் ஒண்ணு சொல்லட்டா, நீ எல்லா குரங்குகளையும் கொல்லணுமுன்னு சொல்றே. ஒரு குரங்கை மட்டும் கல்லெறிஞ்சி கொன்னு ஒரு கம்புல கட்டி

கொ. மா. கோதண்டம்



வச்சிட்டா மத்த குரங்குகள் இங்கே வரா துல்லே!" என்றான் அகிலன்.

"ஒன்றைக் கொன்றாலும் கொலை தான். பத்தைக் கொன்றாலும் கொலை தான். கொலையே செய்யாம ஏதாவது ஐடியா சொல்லுங்க" இது முருகன்.

"இரவுல பெட்ரோமாக்ஸ் விளக்கோட ஓராளை காவலுக்குப் போட்டா?" என்று நிறுத்தினான் கண்ணன்.

"இருங்கப்பா. அடிவாரம் இங்கே யிருந்து ஒரு மைலுதான் இருக்கும். நான் போயி ஆதிவாசி பையன் நீலனை சைக்கிள்ல வச்சி கூட்டியாறேன். அவன் ஏதாச்சும் நல்ல யோசனை சொல்லலா மில்லையா?" என்றான் இளங்கோ.

"சரிப்பா! இளங்கோ கூட முருகா, நீயும் போ" என்றான் மணி.

அவர்கள் குனித்து விட்டு எழுவதற்கும் போன பையன்கள் நீலனுடன் வருவதற் கும் சரியாக இருந்தது.

எல்லோரும் இளநீர் சாப்பிட்டதும் வயல் பக்கம் சென்றனர்.

சகதி உழவு முடிந்த வயலில் தண்ணீர் கட்டியிருந்தது. நெற்பயிர் நாற்றுகள் வாடி நீரில் மிதந்து கொண் டிருந்தன. நீலனுக்கு சூழ்நிலையை விளக்கி அவர்களின் விவாத முடிவுகளையும் கூறி னார்கள்.

இதையெல்லாம் கேட்ட நீலன் யோசித்தான்.

"சாமி பொதுவா விலங்குக நமக்குக் கெடுதி செய்யணுமுன்னு நினைக்கிற தில்லே. ஏதோ ஒரு சூழ்நிலையாலதான் இப்படி நடந்திருக்கு. பொதுவா எல்லா உயிரினங்களும் மனுசங்களுக்கு நன் மையே செய்யுது சாமி. இப்ப குரங்கு களால நமக்கு நஷ்டம்தான். அதுக்காக அதுகளை ஒரேயடியாக கொல்லணு முன்னு சொல்றது சரியில்லை சாமி."

"சரி வேற வழி?"

"இப்ப நான் ஒண்ணு செய்யப் போறேன். அது கூட குரங்குகளுக்குக் கஷ் டம் தருவதுதான். ஆனா வேற வழி யில்லே. இப்பப் போயி யாராச்சும் மிள காய்ப் பொடி எடுத்துக்கிட்டு வாங்க."

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே கண்மாய்க் கரை மரங்களில் குரங்குகள் சத்தம் போட்டு ரகளை செய்து கொண்டிருந்தன.

மணி மிளகாய்ப் பொடி கொண்டு வந்தான்.

"சோறும் கொண்டாங்க சாமி. அதோட ரெண்டு பேர் போயி ஆளுயர நாணல் குச்சிகள் ஒரு பத்து, பதினைஞ்சு ஒடிச்சிட்டு வந்திருங்க" என்று நீலன் கூறியதும் இரண்டு பேர் நாணல் குச்சிக ளை எடுக்க ஓடினார்கள்.

இவர்கள் ஏதோ செய்கிறார்கள் என்று தெரிந்து அக்கம் பக்கத்து வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களும் வந்து கூடி விட்டார்கள்.

"இவ்வளவு கூட்டம் இருக்கக் கூடாதே" என்று நீலன் கூறவும் மணி அவர்களைப் போகச் சொன்னான்.



அவர்கள் சிறிது தூரம் சென்று ஆங்காங்கு வரப்புக் கரைகளில் நின்று வேடிக்கை பார்த்தனர். நீலன் ஒரு பெரிய வாழை இலையில் சோற்றைப் போட்டு மிளகாய்த் தூளைக் கலந்து பிசைந்தான். அதை உருட்டி எடுத்து துண்டு இலைகளில் வைத்து அந்த மாணவர்களுடன் அவற்றை எடுத்துச் சென்று கண்மாய் கரையில் உள்ள ஒரு பாறையில் தள்ளித் தள்ளி வைத்தான் நீலன். நாணல் குச்சிகளை ஆங்காங்கே பரப்பி வைத்தான். "எல்லோரும் தூர ஓடிப் போயிடுங்க" என்றபடி நீலன் ஓடிச் சென்று தூரத்தில் நின்றான்.



ஆரவாரத்தை நிறுத்திய குரங்குகள் மெல்ல ஒவ்வொன்றாகக் கீழே இறங்கி, பாறைக்கு வந்தன.

அங்கிருந்த சோற்று உருண்டைகளை எடுத்துத் தின்றன. காரம் பொறுக்க முடியாமல் 'காச் மூச்'சென கத்தின. நாணல் குச்சிகளைப் பார்த்ததும் ஆளுக்கொன்றாக எடுத்து ஒன்றை ஒன்று குச்சிகளால் அடித்துக் கொண்டு நாக்குகளை தொங்கப் போட்டுக் கொண்டு 'ஊஊஉஸ்ஸூ' என்று கத்திக் கொண்டு ஓடி மரங்களில் ஏறி மறைந்தன. குரங்குகளின் கூச்சலும் வெறியாட்டமும் ஒன்றையொன்று அடித்துக் கொண்டு ஓடிய ஓட்டமும் அவர்களுக்கு விந்தையான காட்சியாக இருந்தது.

"இனி கொஞ்ச காலத்துக்கு எந்தக் குரங்கும் இந்தப் பக்கம் வராது சாமி" என்றான் நீலன்.

அங்கே வந்த வயதானவர், "நீலா நீ குரங்குகளையும் கொல்லாம எங்க முதலாளிக்கு எந்தச் சிக்கலும் ஏற்படுத்தாம தந்திரமா விரட்டி விட்டியேப்பா! உனக்குக் கோடி புண்ணியம்பா" என்றார்.


"சரி! இந்தா நீலா ஐம்பது ரூபா வச்சுக்கோ. நான் எங்க அப்பாவை உடனே கூட்டியாரணும், வாங்கடா போவோம்" என்று மணி கூறியதும்,

"சரி, நீங்க மணி கூடப் போங்க. நா நீலனை அடிவாரத்துல இறக்கி விட்டுட்டு வந்திடுறேன்" என்று இளங்கோ சொல்லி விட்டு நீலனுடன் கிளம்பினான்.



என் பங்கு...


கதை : ஜானகி முத்துக்குமார்
படம் : தாமரை




வண்டி சந்தையை அடைந்தது.
ஒரு வண்டி தேங்காய் எவ்வளவுப்பா?
நானூறு ரூபாய.
இந்தா பணம். தேங்காய்களை இறக்கு.
இறக்கி முடித்ததும் –
பாண்டியா என் பங்கு ரூபாயைக் கொடு.
என்னது! உன் பங்கு ரூபாயா?
ஆமாம்! வண்டியில் இருந்த பாதி தேங்காய் என்னுடையது தானே!
என்ன பேசறே?


பணத்தைக் கொடு.
அரை மூடித் தேங்காயை வண்டியில் வச்சிட்டு, வண்டியில் பாதி கேட்கறியே! நியாயமா?
பஞ்சாயத்துக்குப் போவோம்.
என்னை ஏமாத்தாதே!
பஞ்சாயத்தில் பாண்டியன் வாதத்தைக் கூறி முடித்தார்.
நீ என்ன சொல்றே கந்தசாமி?
காய்களை ஏற்றி ஒண்ணா சந்தைக்குப் போனோம். கையில் பணம் வந்ததும் மனம் மாறிட்டான் பாண்டியன்.
சரி! ரெண்டு பேரும் உங்கள் பிள்ளைகளின் தலையில் அடித்து சத்தியம் செய்யுங்க..
சரிங்க ஐயா!
சிறிது நேரத்தில் பிள்ளைகளுடன் இருவரும் திரும்பினர்.
நான் சொல்வது சத்தியம்.
நான் சொல்வதும் சத்தியம். பொய்யாக இருந்தால் இது எனக்கு உதவாமல் போகும்.


பாண்டியா இருநூறு ரூபாயைக் கந்தசாமியிடம் கொடு.
இந்தாடா பாவி.
பஞ்சாயத்து கலைந்தது. அவரவர் வீடு நோக்கி நடந்தனர்.
அப்பா! தலையில் மண்ணை ஏன் கட்டினீங்க?
பொய் சத்தியம் செய்யத்தான். இரு அவிழ்க் கிறேன்.
கந்தசாமி! நல்லா மாட்டிட்டே. மணலைக் கட்டி உதவாமல் போகட்டும்னு புத்திசாலித்தனமா செஞ்சிருக்கே?
ஐயா! நீங்க எப்படி?
உன்னைப் பற்றி தெரிந்துதானே பின்னாலேயே வந்தோம்.
என்னை மன்னிச் சிடுங்க.
பாண்டியனுக்கு இருநூறு ரூபாயும், பஞ்சாயத்துக்கு ஐம்பது ரூபாயும் அபராதம் கட்டு.
ஐயோ! அரை மூடித் தேங்காய் போனதும் இல்லாமல் காசும் போச்சே!



கோகுலம்

சந்தா செலுத்துங்கள்!

கோகுலம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பருக்கு பரிசளிக்க வேண்டுமா? அப்படியானால் சந்தா செலுத்தலாமே? ஒவ்வொரு மாதமும் உங்களைத் தேடி வீட்டுக்கே வரும் கோகுலம்!

இந்த சந்தாப் படிவத்தைப் பூர்த்தி செய்து உடனே அனுப்பி வையுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



ஏது இல்லை?

வேலனும் பாலனும் எட்டாம் வகுப்பில் படிக்கும் நண்பர்கள்.

ஆசிரியர்கள் வகுப்பில் சொல்லிக் கொடுப்பதை உற்றுக் கேட்டு மனதில் இருத்திக் கொள்ளும் இயல்புடையவன் வேலன்.

பாலனோ இதற்கு நேர்மாறானவன். பாடவேளையில் பக்கத்துப் பையன்களிடம் பேசுவான்; அப்படியே கேட்டாலும் அரைகுறையாக அலட்சியமாக காது கொடுப்பான்; அதனாலேயே தேர்வுகளில் மதிப்பெண்கள் அவனுக்குக் குறையும்; வீட்டில் காலையிலும் மாலையிலும் படிக்கும்போதும் திசை மாறும் நினைவுகள்தான் அவனுக்கு.

ஒருநாள் தமிழாசிரியர், "பாலா... நீ படாதபாடுபட்டுப் படித்தேன் என்று சொன்னாய், தமிழ்ப் பாடத் தேர்வில் மிகக் குறைந்த மதிப்பெண்தானே பெற்றிருக்கிறாய்?" எனக் கேட்டார்.

"விழுந்து விழுந்து நான் படித்தது உண்மைதான் சார். என் மூளையில் ஏறாததற்கு என்ன பண்றதுன்னுதான் புரியவில்லை" என்றான் பாலா.

"அப்படி அல்ல பாலா. வேலன் படிப்பில் கவனம் செலுத்துவதைப் போல நீயும் இருந்தால் நிச்சயம் வெற்றி கிட்டாமல் இருக்காது" என்றார் தமிழாசிரியர்.

"எனக்குப் படிப்பில் கவனம் இல்லையென எப்படி சார் சொல்றீங்க?" என்று பாலா கேட்டான்.

"சரி, அப்படியானால் உனக்கு இப்போது ஒரு சின்ன சோதனை வைக்கிறேன்; அதில் நீ வெற்றியடைந்தால் உனக்குக் கவன சக்தி அதிகம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன்" என்றார் ஆசிரியர்.

"சரி" என்றான் பாலா.

"அவல் இருந்தால் பலகாரம் பண்ணலாம். ஆனால் சர்க்கரை இல்லை என்றால் என்ன இல்லை? தாமதிக்காமல் 'டக்'கென்று சொல்" என்றார் ஆசிரியர்.

"அவல் இல்லை" என்றான் பாலன்.

"என்ன வேலா! நீ சொல்" என்றார் தமிழாசிரியர்.


"இரண்டும் இல்லை சார்" என்றான் வேலன்.

"பாலா உன்னிடம் கவனப்பிசகு உள்ளது." மறுபடியும் அவல் இருந்தால்... என்பதைச் சொன்னார் தமிழாசிரியர்.

அப்போதுதான் பாலனுக்குப் புரிந்தது.

தமிழாசிரியர், "கவனம்தான் கல்வி வளர்ச்சிக்கு அடிப்படை" என்றார்; பாலன் கவனமாகக் கேட்டு உணர்ந்து கொண்டான்.

— பொறையாறு கங்கா கணேசன்




ஈ, எறும்பு வராத இடம் எது?

பத்திரமான இடம்!

அப்பா ஸ்வீட் வாங்கி வந்தார். எல்லோரும் சாப்பிட்ட பின் ஒரு லட்டும் ஜாங்கிரியும் மீதமிருந்தது. அப்பா தம்பியிடம் ''இந்த லட்டையும் ஜாங்கிரியையும் ஈ, எறும்பு வராத இடத்தில் வை'' என்று கொடுத்தார். சிறிது நேரம் சென்றது. ''எங்கே வச்சிருக்கிறே?'' என்று கேட்டார் அப்பா தம்பியிடம். ''சாப்பிட்டுட்

சோறு போடுவது யார்?

ஊரிலிருந்து மாமா வந்திருந்தார். முதல் வகுப்பு படிக்கும் என் தம்பியிடம் ''இன்னிக்குப் பள்ளிக்கூடம் போனியா?'' என்று கேட்டார் மாமா. ''ம்... போனேன்'' என்றான் தம்பி. சில நிமிடம் கழித்து, ''மாமா! நீங்க பள்ளிக்கூடம் போக மாட்



டீங்களா?'' என்று கேட்டான் தம்பி. இதைக் கேட்டு சிரித்த மாமா ''நான் பள்ளிக்கூடம் போயிட்டால் யார் சோறு போடுவாங்க?'' என்று கேட்டார். ''அதான் பள்ளிக்கூடத்திலேயே சோறு போடுறாங்களே!'' என்றான் தம்பி. நாங்கள் அனைவரும் சிரித்தோம்.

– எஸ். ராஜசேகரன், ராஜபாளையம்.

நூறு வெங்காயம்!

நானும் தம்பியும் கடைக்குச் சென்றோம். வழியில் என் நண்பனைப் பார்த்தவுடன் நின்று பேச ஆரம்பித்தேன். என் தம்பி ''அண்ணா! நான் கடையிலே வெங்காயம் வாங்கிட்டிருக்கேன். நீ பின்னாடி வா!'' என்றான். நானும் இரண்டு ரூபாய் கொடுத்து ''நூறு வெங்காயம் வாங்கு'' என்றேன். அவனும் சென்றான். சிறிது நேரம் சென்றது. வெங்காயம் வாங்கப் போனவனைக் காணோம். வேகமாக கடையை அடைந்தேன். ''முருகா, உன் தம்பி பண்ற வேலையைப் பாரு. நூறு வெங்காயம் கேட்டான். நிறுத்துக் கொடுத்தேன். இன்னும் தொண்ணூற்றி ஏழு வெங்காயம் வேணும்னு அடம் பிடிக்கிறான்'' என்றார். ''மன்னிச்சிடுங்க! நான் அவனுக்கு விளக்கிச் சொல்றேன்!'' என்று அவனை அழைத்து வந்தேன்.

– ஜி. கார்த்திக் முருகன், ரங்கராஜபுரம், சென்னை.





டேன்'' என்றான் தம்பி. ''ஏண்டா ஒரே நேரத்துல இவ்வளவு ஸ்வீட் சாப்பிடறே?'' என்றார் அப்பா. உடனே ''நீங்கதானே ஈ, எறும்பு வராத இடமா வைக்கச் சொன்னீங்க. மற்ற இடங்களில் வர வாய்ப்பு இருக்கு. என் வயிறுதான் பத்திரமான இடமாக எனக்குப்பட்டது'' என்றானே பார்க்கலாம்!

– க. நடேசன், பத்தாம் வகுப்பு,
அரசினர்மேல்நிலைப் பள்ளி,
பெரியதச்சூர்.

எப்படி வாழ?

காய்கறிக் கடையில் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது ஒரு பெரியவர் கடைக்காரரிடம் ''எப்படிங்க வாழ?'' என்று கேட்டார். ''கூட்டம் அதிகமா இருக்கு. என்ன பண்றதுன்னே புரியலை. இப்ப வந்து எப்படி வாழன்னு கேட்கறீங்களே! நீங்க எப்படி வேணாலும் வாழ்ந்துட்டுப் போங்க. எனக்கென்ன?'' என்றார் கோபத்துடன் கடைக்காரர் ''வாழைக்காய் எவ்வளவுன்னு கேட்டதுக்கு இப்படி கோபப்படறியே, நியாயமா?'' என்றார் பெரியவர். ''வாழைன்னு கேட்காமல் வாழன்னு கேட்டதால தான் பிரச்னை. மன்னிச்சிடுங்க'' என்றார் கடைக்காரர்.

– த. கணேஷ்,
வரிக்கல்,
செஞ்சி.




மல்லிகைப் பூ இட்லி!

நானும் மாமாவும் இட்லி கடைக்குச் சென்றோம். அங்கு பலகையில் 'மல்லிகைப் பூ இட்லி கிடைக்கும்' என்று எழுதியிருந்தது. என் மாமா கடைக்காரரிடம் ''எனக்குச் சாதாரண இட்லி கொடுங்க. மல்லிகைப் பூ வாசம் ஒத்துக்காது'' என்றார். கடைக்காரர் சிரித்தபடி ''சார்! நல்லா ஜோக் அடிக்கறீங்க'' என்றார். ''சார் நீங்கதான் ஜோக் அடிக்கிறீங்க. மல்லிகைப் பூ மாதிரி இட்லி இருக்குமா? பூவையும் இட்லியையும் ஏன் சார் ஒண்ணா ஆக்குறீங்க?'' என்றார் மாமா. உடனே கடைக்காரர் 'மல்லிகைப் பூ' என்பதை அழித்துவிட்டு 'மிருதுவான இட்லி' என்று எழுதினார்.

– உ. செல்வமணி,
வெள்ளை கிராமம்,
செய்யாறு.



குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. கையில் அணியக்கூடிய அணிகலன் (4)
7. ஆற்றல், சக்தியை இப்படியும் அழைக்கலாம் (3)
8. ஆமை, முதலையின் குஞ்சுகள் இதிலிருந்து வெளிவருகின்றன (3)
10. செய்த செலவுக்கு அதிகப்படியாகக் கிடைக்கும் வருமானம் (3)
13. பயனற்ற செலவு (4)

வலமிருந்து இடம்

2. ஆபத்து நேரத்தில் ஒருவருக்கு ஏற்படும் உணர்வு (4)
5. கொடியில் காய்க்கும் காய்களில் ஒன்று (3)
9. கால்நடைகளின் தொகுதி (3)
14. கலகம் செய்பவரை இப்படி அழைப்பார்கள் (4)

மேலிருந்து கீழ்

1. கீரைகளில் ஒன்று. சிறுநீரகம் போன்ற வடிவில் இருக்கும் (4)
2. வாத்து இனத்தில் உள்ள ஒருவகை பறவை (4)
6. பொருட்களை வைக்க சதுரம், செவ்வக வடிவில் மூடக்கூடிய வகையில் செய்யப்பட்ட சாதனம் (3)
11. மனிதன் இது கொள்ளக் கூடாது (3)
12. இதைப் பாதுகாக்க வேலி போட வேண்டும் (3)

கீழிருந்து மேல்

3. துள்ளி குதிக்கும் பிராணி. இதை ஆமை வென்றதாகக் கதை உண்டு (3)
4. குதிரையைக் கட்டும் இடம் (3)
13. விடையை ஊகித்துக் கண்டறிவதற்கான விவரங்களை தன்னிடத்திலேயே உள்ளடக்கியிருக்கும் வாக்கியம் (4)
14. ஒரு கதை அல்லது நிகழ்வை நடிப்பின் மூலம் காட்டும் கலைவடிவம் (4)

– வி. டீனா ஸ்வீட்டி,
பத்தாம் வகுப்பு, வித்யாநிகேதன்
மெட்ரிக் பள்ளி, வேலூர்

விடை 73 ஆம் பக்கம்

ஜம்பு ஏன் குரைக்கிறது?

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி 1

இடம்: சரண் வீடு

(வாணி கட்டுரை எழுதிக் கொண்டிருக் கிறாள். சரண் அங்கு வருகிறான்)

சரண்: வாணிக்கா!... என்ன ரொம்ப நேரமா எழுதிக்கிட்டிருக்கே? உள்ளே அம்மா உன்னைக் கூப்பிடறாங்க கடைக் குப்போய் ஏதோ காய்கறி வாங்கிக்கிட்டு வரணுமாம்!

வாணி: இதோ பார், நான் ஒரு போட்டிக்காக கட்டுரை எழுதிக்கிட்டிருக்கேன்... நீயே போய் வாங்கிக்கிட்டுவா!

சரண்: என்ன போட்டி?

வாணி: இந்த வருடத்தை, அதாவது 1999ஐ சாலைப் பாதுகாப்பு வருஷமா கொண்டாடிக்கிட்டிருக்காங்க... அதுக்காக 'சிறுவர்களும் சாலை விபத்துகளும்'கிற தலைப்பிலே ஒரு நிறுவனம் சிறுவர்களுக் கான கட்டுரைப் போட்டி ஒண்ணு அறிவிச்சிருக்காங்க!

சரண்: சிறுவர்களும் சாலை விபத்து களுமா...?

வாணி: ம்...! அதைப்பத்தி தான் விளக்கமா இந்தக் கட்டுரையிலே எழுதப் போறேன். முக்கியமா உன்னை மாதிரி சைக்கிளை நினைச்சபடி ஓட்டற வங்களுக்காகத்தான் இந்தக் கட்டுரை எழுதறேன். எழுதி முடிச்சதும் படிச்சுக் காட்டறேன்.

சரண்: ஏய், என்னை சொல்றியா? எனக்கு எல்லாம் தெரியும்... நான் எப்படி ஓட்டினாலும் சைக்கிளை பிரமாதமா ஓட்டுவேன்... சமயத்துலே ரெண்டு கைகளையும் விட்டுட்டுகூட வேகமா ஓட்டுவேன்! ஆனா எப்படி ஓட்டினாலும் சரியாவே ஓட்டுவேன் தெரிஞ்சுக்கோ!

வாணி: அப்படீன்னு நீ நினைச் சுக்கிட்டிருக்கே... நீ சைக்கிளை ஓட்டற அழகு எனக்கு நல்லா தெரியுமே! சரி, சரி, சீக்கிரமா சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போய், காய்கறி வாங்கிட்டு வா! ஒரு நிமிஷம்! சைக்கிளை எடுத்து நாலைஞ்சு நாளாச்சு!... எல்லாம் சரியா இருக்கான்னு பார்த்து எடுத்துக் கிட்டுப் போ!

சரண்: ஹலோ ஜம்பு! ஜம்பு!... வா வா!

வாணி: ஓ! உன்னோட அன்பிற்குரிய செல்ல நாயைக் கூப்பிடறியா...? பார்த்துக் கொஞ்சு...! அது வீட்டு நாயில்லே... தெரு நாய், தெரியுமில்லே? கூடவே சைக்கிள் பின்னால வச்சு அழைச்சுக்கிட்டுப் போவியே...?

சரண்: போவேன்.... அது என் இஷ்டம்! ஜம்பு! ஜம்பு!

காட்சி 2

இடம்: சரண் வீடு

ரவி: மாமா... மாமா...!

வாணி: வா ரவி! இரு! அப்பா உள்ளே இருக்கார். கூப்பிடறேன்...

அப்பா: வா ரவி! என்னடா இது கையெல் லாம் காயம்?

ரவி: ஆமாம் மாமா! இதைக் காட்டத்தான் வந் தேன். சரண்தான் இதுக்குக் காரணம்!



அப்பா: அப்படியா? சரண் என்ன செஞ்சான்?

ரவி: சரண் எங்க பள்ளிக்கூடம் வழியா வரப்போ வழக்கம்போல சைக்கிளை வேகமா ஓட்டிக்கிட்டு வந்தான். நாங்க பள்ளிக்கூடம் விட்டு வெளியே கும்பலா வந்துகிட்டிருந்தோம். அப்போ சரணால சைக்கிளோட வேகத்தைக் கட்டுப்படுத்த முடியலே. ரெண்டு பேர் மேல சைக்கிளை இடிச்சுட்டான். எதிர்பாராம நான் கீழே விழுந்ததிலே இப்படி அடிபட்டுருச்சு.

அப்பா: அப்படியா...? சரண் எங்கிட்டே இதைப்பத்தி சொல்லவே இல்லையே!

வாணி: அவன் சொல்ல மாட்டான்! சொன்னா தன்னோட சைக்கிள் ஓட்டற திறமையை மத்தவங்க குறைவா நினைச்சுடுவாங்களோன்னு ஒரு பயம்!

அப்பா: சரண் இப்போ எங்கே?

வாணி: அதோ அவனே வந்துக்கிட்டிருக்கான்!

அப்பா: டேய் சரண், அந்தத் தெரு நாயை கையிலே தூக்கி வச்சுக்கிட்டு என்னடா கொஞ்சல்? அதைக் கீழே விட்டுட்டு இப்படி வாடா!

சரண்: என்னப்பா?

அப்பா: இதோ பார்! உன் சைக்கிள் மோதி ரவிக்கு எப்படி அடிபட்டிருக்கு...! இதைப்பத்தி ஏன் எங்கிட்டே சொல்லலே...? தப்பு உன் மேலதானே?

சரண்: வந்து... இல்லேப்பா... வேகமா வந்ததுனால உடனே பிரேக் போட முடியலே!

ரவி: வேகமா மட்டும் வரலே... பாடிக்கிட்டும் வந்தே... அதான் இப்படி...

வாணி: அங்கே ஸ்கூல் ஸோன்னு (School zone) பெரிசா ரெண்டு பக்கமும் போர்டு எழுதி நிறுத்தி வச்சிருக்காங்க இல்லே...! பார்த்து மெதுவா போங்கன்னு தானே அதுக்கு அர்த்தம்...!

ரவி: சரி மாமா, நான் வரேன்.

வாணி: சரண்! ஹேண்டில்பாரைப் பிடிச்சுட்டு சீட்டு மேல தாவி உட்கார்ந்து, பெடலை அழுத்தி ஓட்டறதுதான் சைக்கிள் ஓட்டறதுன்னு நினைக்காதே!

அப்பா: நல்லா சொன்னே.... வாணியும் தான் ரெண்டு வருஷமா சைக்கிள் ஓட்டறா. இதுவரைக்கும் ஒரு விபத்து இல்லே! அவ சொல்றதை அப்பப்போ கேட்டுக்க!

சரண்: ஜம்பு...! கமான்...! இந்தா பிஸ்கட்...!

வாணி : பாருங்கப்பா....! இவ்வளவு நடந்தும் சரண் எதுக்கும் வருந்தாம நாயோட விளையாடப் போறான்.... ரவி கிட்டே கூட இதுக்காக வருத்தப்படலே!



அப்பா: இந்த நாய்கிட்டே இவனுக்கு ஏன் இவ்வளவு பாசம்?

வாணி: அப்பா, இந்த நாய் ஜம்புவை உங்களுக்கு அடையாளம் தெரியலே?

அப்பா: எவ்வளவோ நாய்களுக்கு மருத்துவம் பார்த்து, நோய் தடுப்பு ஊசியும் போட்டிருக்கேன்!

வாணி: ஆனா லாரி ஏறினதால உடைஞ்ச இந்த நாயோட ரெண்டு கால்களையும் நீங்கதான் வைத்தியம் பண்ணி, ஒட்ட வச்சிருக்கீங்க! அதோ பாருங்க... பின்னங்கால்களில் அடையாளம் தெரியுது.

அப்பா: அதான் நன்றியோடு நம்ம வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க்கிட்டிருக்கு!



''ராமு, மான்களின் நான்கு இனங்களைச் சொல்லு!''

''கலைமான், கடம்பை மான், வலங்கைமான், அந்தமான் சார்!''

— நெ. இராமன்

காட்சி 3

இடம்: *சரண் வீடு*

அப்பா: வாணி, உனக்கு என் வாழ்த்துகள்! சாலைப் பாதுகாப்பு வருஷத்தையொட்டி நடந்த கட்டுரைப் போட்டியிலே உனக்கு முதல் பரிசு கிடைச்சிருக்கு! இந்தா கடிதம் வந்திருக்கு!

வாணி: (படித்து விட்டு) அப்பா, நாளைக்கு மறுநாள் பரிசளிக்கிற விழா வச்சிருக்காங்க!

அப்பா: விழாவிற்கு சரணையும் அழைச்சுக்கிட்டுப் போவோம்! அவனுக்குத்தான் சாலைப் போக்குவரத்து விழிப்புணர்ச்சி ரொம்ப அவசியம். உன்னோட கட்டுரை நகல் வச்சிருக்கே இல்லே, கொண்டா பார்க்கலாம்!

அப்பா: டேய், உன் அக்கா சாலைப் பாதுகாப்பு பத்தி கட்டுரை எழுதி முதல் பரிசு வாங்கியிருக்காடா!

சரண்: ம்....

அப்பா: என்ன 'ம்?'.... அவளுக்கு வாழ்த்து சொல்லுடா!

சரண்: வாழ்த்துகள்!

வாணி: எதுக்கு இப்படி வேண்டா வெறுப்பா சொல்றே? பேசாமலேயே இருந்திருக்கலாம்.

அப்பா: டேய் சரண்... வாணி எழுதியிருக்கற இந்தக் கட்டுரையிலே முக்கியமான வரிகளைப் படிக்கிறேன், கேளு! 'சைக்கிளில் வேகமாக சவாரி செய்வது மகிழ்ச்சியாயிருக்கலாம். ஆனால் அகன்ற நீண்ட சாலைகளில் மட்டும் வேகமான சவாரிக்கு ஆசைப்படலாம்! குறுகலான, ஜனநெரிசலான பள்ளிக்கூடம், வைத்திய சாலை போன்ற இடங்களுக்கு முன் வேகமான சவாரி விவேகமில்லை. இரு கைகளையும் விட்டு விட்டு ஓட்டுதல், சைக்கிளை வளைத்து வளைத்து ஓட்டுதல், மூன்று பேர்கள் உட்கார்ந்து செல்லுதல், திருப்பங்களில் வேகமாகத் திரும்புதல், நிற்கும்போதும் திரும்பும் போதும் கையைக் காட்டாமல் திரும்புதல், தவறான திசையில் ஓட்டுதல், பெல், பிரேக், பெடல் இவைகளில் பழுது ஏற்பட்டு இருந்தால், அவற்றை அலட்சியமாய் எண்ணி ஓட்டுதல் – இவையே சாலை விபத்துகள் ஏற்பட முக்கிய காரணங்களாகும். சர்க்கஸ் வேலைகளை சாலைகளில் காட்டுவது அறிவீனம். எதையும் வருமுன் தவிர்க்க முயல்வதே புத்திசாலித்தனம்.' என்ன சரண், படிச்சதைக் கவனிச்சே இல்லே! உனக்காகத்தான் இந்த வரிகள்! இத்தனை தவறுகளையும் நீ செய்துக்கிட்டிருக்கேன்னு நினைக்கிறேன்.

சரண்: எனக்கு எல்லாம் தெரியும்ப்பா! ஜம்பு...! ஜம்பு...!

அப்பா: என்ன இவன் ஜம்புவைப் பார்த்ததும் இப்படி ஓடறான்?



"சந்தேகப் பேர்வழிக்குச் சிகிச்சை செய்தது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"நீங்க உண்மையான டாக்டர் தானான்னு கேக்குறாரே!"

— இரா. உதயகுமார்

காட்சி 4

இடம்: *சரண் வீடு*

வாணி: என்னடா சரண், சர்க்கஸுக்குப் போறேன்னு சைக்கிளை எடுத்துக்கிட்டு வேகமாப் போனே... ஏன் திரும்பி வந்துட்டே? என்ன ஆச்சு?

சரண்: டிக்கெட் கிடைக்கல. போன வேகத்திலே திரும்பி வந்துட்டேன். ஏய், ஜம்பு! என்ன இப்படி ஓடி வரே?

வாணி: என்ன ஜம்பு இப்படி குரைச்சுக்கிட்டே உள்ளே ஓடி வருது?

அப்பா: என்னம்மா இது... இந்த ஜம்பு என்னோட பேண்ட்டை இப்படி வாயால கவ்வி இழுக்கறது?

வாணி: இதைப் பார்த்தாலே பாவமாயிருக்குப்பா... எதையோ உங்களுக்குக் காட்டணும்னுதான் இப்படி பேண்ட்டைப் பிடிச்சு இழுக்கறது...

அப்பா: அப்படித்தான் இருக்கணும்... ஏய் ஜம்பு எங்கே நீ கூப்பிடறே?

வாணி, சரண்: அப்பா நாங்களும் வரோம்!

ரவி: மாமா...! நீங்க எங்கேயும் போக வேணாம்! இதோ பாருங்க, இதுக்காகத்தான் இந்த ஜம்பு உங்களைக் கூப்பிட்டுக்கிட்டிருக்கு!

அப்பா: ரவி...! என்ன இது, கையிலே நாய்க்குட்டியைத் தூக்கிக்கிட்டு வந்திருக்கே? நாய்க்குட்டிக்கு என்ன ஆச்சு?

ரவி: மாமா, இது இந்த ஜம்புவோட குட்டிதான்! சைக்கிள் சக்கரம் ஏறினதாலே துடிச்சுக்கிட்டிருந்தது. இடுப்பிலே நல்ல காயம். இரத்தம் வருது பாருங்க! இதை உங்களுக்குக் காட்டி வைத்தியம் செய்யத்தான் ஜம்பு உங்களைக் கூப்பிடறது.

சரண்: என்ன, இது இந்த ஜம்புவோட குட்டியா? எப்படி அடிபட்டது?

ரவி: ஆமாம் ஜம்புவோட குட்டிதான். அடுத்த தெருவிலே போட்ட குட்டி. சரண்! இது உன்னோட சைக்கிள் சக்கரம் ஏறித்தான் அடிபட்டது... நீ கொஞ்ச நேரம் முன்னால அவசரம் அவசரமா 'டபிள்ஸ்' போனப்போ, வழியிலே விளையாடிக்கிட்டிருந்த இந்தக் குட்டி மேல ஏத்திட்டுப் போயிட்டே!

சரண்: நான் கவனிக்கவே இல்லையே!

வாணி: உனக்குத்தான் அவசரமாச்சே! வேகமா ஓட்டியிருப்பே. இந்தக் குட்டியோட அலறல் உன் காதுலே எங்கே விழுந்திருக்கப் போகுது... ஒருவேளை விழுந்திருந்தாலும் விழாத மாதிரி போயிருப்பே...

அப்பா: பாருடா தடிப்பயலே...! தாய் நாய் ஜம்பு உன்னைப் பார்த்து எப்படிக் குரைக்கறது பார்...! ஜம்புவோட கண் கலங்கியிருக்கு பார்! ரவி! நாய்க்குட்டியை இந்த பெஞ்ச் மேல வை.

சரண்: ஜம்பு, சாரி ஜம்பு! குரைக்காதே ஜம்பு!

வாணி: சரண்! ஜம்பு இனிமே உன்னோடு கொஞ்சாது. குட்டி நாய் எப்படி கத்தறது பார்!

சரண்: வாணி, சைக்கிளை ஓட்டறதிலேகூட எவ்வளவு கவனம் தேவைன்னு இப்பத்தான் எனக்குப் புரியறது... நீ எழுதின கட்டுரையைக் கொடு. நல்லா படிச்சுப் பார்க்கறேன். சந்தேகங்களைக் கேட்டுக்கறேன். தவறுகளைத் திருத்திக்கிறேன்.

வாணி: என் கட்டுரையா? அது உனக்கு எதுக்கு? உனக்குத்தான் எல்லாம் தெரியுமே!

சரண்: ம்ஹூம்.. எனக்கு எதுவும் தெரியாது. இனிமே தெரிஞ்சிப்பேன். அப்பா! நாய்க்குட்டிக்கு நல்லா வைத்தியம் செய்யுங்கப்பா! ஜம்பு! குரைக்காதே! என்னை மன்னிச்சுடு ஜம்பு!


5 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி படம்: லலிதா




பறவை சென்றதும் வெளிச்சம் வர மீண்டும் நடந்தான்.
ருக் பறவையின் முட்டையைப் பார்த்து கட்டடம் என ஏமாந்து போனேனே, சே!
ஆ! இந்த ருக் பறவை யானையைக்கூட தன் குஞ்சுகளுக்கு ஊட்டுமாமே!
பயமாயிருக்குதே! இந்தத் தீவிலேயே என் வாழ்க்கை முடிஞ்சிடும் போலிருக்கே!


சிறிது நேரத்தில் ருக் பறவை பறந்து வந்து முட்டை மேல் அமர்ந்தது.
சிந்துபாத்திற்கு ஒரு யோசனை தோன்றியது.
இடுப்புத் துண்டைக் கிழிச்சு கயிறு தயார் பண்ணலாம். கயிறை இந்தப் பறவையின் காலில் கட்டி....ம்ம்ம் நல்ல யோசனை!
பறவையின் காலிலும், தன் இடுப்பிலும் கயிறைக் கட்டினான்.
நல்லா கட்டியாச்சு. பறவை எப்ப கிளம்புமோ?
மறுநாள் காலை!
கிக்கி கீ கிக்கி ... கிக்கிகீ கிக்கி கீகீகீ.........


காலைப் பிடிச்சுக்கிட்டால்கூட பயமா இருக்கு... எவ்வளவு வேகம்! கண்ணைத் திறந்தால் தலை சுத்துதே...
திடீரென பறவை கீழ் நோக்கிச் சென்றது.
மலைப் பாம்பைக் கொத்திக் கொண்டு மீண்டும் பறந்தது. நீண்ட நேரப் பயணத்திற்குப் பின் ஒரு மலையில் இறங்கியது ருக் பறவை.
(தொடரும்)

இருளில் ஒரு ரகளை!

எங்கள் வீட்டுச் சமையலறைக்குள்
ஏதோ ஓர் ஒலி கேட்கிறது
மங்கிய இருளுடன் மணி பத்தாக
மர்ம ஓசை கேட்கிறது!

பேயா? பேயின் சொந்தச் சகோதரன்
பூதம் தானா புரியவில்லை
பாயை விரித்துப் படுத்த வேளையில்
'படபட' ஓசை கேட்கிறது!

விளக்கைப் போட்டார் என் அம்மா.
விரைந்து வந்த அப்பாவோ,
கலக்கம் மிகவும் கொண்டவராகக்
கண்ணை உருட்டிப் பார்க்கின்றார்.

சப்தம் கேட்டு எழுந்த பாட்டி.
சாமி விளக்கை ஏற்றுகிறார்
சுற்றும் முற்றும் தேடிய போதும்
'சூழ்ச்சி' எதுவும் தெரியவில்லை!

பாத்திரம் ஏதும் விழவில்லை.
பத்திரமாக இருக்கிறது
நேந்திர வறுவல் ஜாடிக்குள்ளே
நிச்சயமாக இருக்கிறது.

திருடன் இல்லை; தீமை செய்யும்
ஒருவரும் இல்லை உள்ளுக்குள்.
வருமுன் சாத்திய ஜன்னல் கூட
வகையாய் மூடியே இருக்கிறது.

'படபட' ஓசை வந்தது எப்படி?
பாட்டி என்னைக் கேட்கின்றாள்
'கடமுட' முறுக்கும் காலியானபின்
காதில் விழுந்த ஒலி எதனால்?

ஒன்றும் இல்லை; வெறும் பிரமை என்று
ஒன்றாய் முடிவு செய்துவிட்டு
நன்றாய் ஒருதரம் சுற்றிப் பார்த்தபின்
நல்லது என்றே நினைக்கையிலே;

மறுபடி ஓசை படபடவென்று
மர்மமாகக் கேட்கிறது
தடியுடன் அப்பா தாவி வருகையில்
தந்திரம் புரிந்து போகிறது.

பரணை மேலே பாத்திரக் குவியல்
பாரமாகக் கிடக்கிறது.
திருடன் போல எலியார் அதன்மேல்
தடதடவென்றே ஓடுகிறார்!

பசியே போலும்; பாவம் எலியார்
பரிதவிக்கிறார், என்றேன் நான்.
அசடே, வா நீ உறங்கப் போகலாம்!
அழைத்துப் போனார் என் அப்பா.

— ஜிண்டு







மின்கல மாதவன்!

6. பாவம் போக்கும் பால சித்தர்!

மாதவன் டிக்கெட்டில்லாமல் ஏறிய ரயில், ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் நின்றபடி ஆமை வேகத்தில் ஓடும் பாசஞ்சர். பசி ஒரு பக்கம், டிக்கெட் இல்லாத பயம் ஒரு பக்கம். மாது, சாமான்கள் வைக்கும் பலகையின் மேலே ஏறிப் படுத்துக் கொண்டு விட்டான். அசதியால் பசியையும் மீறித் தூக்கம் வந்து விட்டது. டிக்கெட் பரிசோதகர் அவனை எழுப்பிய போது நள்ளிரவாகி விட்டது. அவனுடைய தோற்றத்தைக் கண்டு இரக்கப் பட்ட அவர், அடுத்த ரயில் நின்ற புளியம் பட்டி ஸ்டேஷனில் அவனை இறக்கி விட்டார்.

ஸ்டேஷன் மாஸ்டர் டிக்கெட் கூடக் கேட்கவில்லை. அத்தனை குளிர்! தூக்கக் கலக்கம்! வெளியே வந்தான். எதிரே வந்த ஒரு உருவம், "தம்பி, தீப்பெட்டி இருக்கா? குளிருக்கு மூட்டம் போட்டுட்டுத் தரேன்" என்று கேட்டது.

"இல்லங்க" என்று கூறி விட்டுக் கால் போன போக்கில் நடந்தான் மாது.

அமாவாசைக்கு அடுத்த நாள் ஆதலால் மை பூசிய இரவாக இருந்தது. குளிர் வேறு எலும்பைக் குடைந்தது. மரத்தடியில் படுத்துக் கொண்டான். பசியும் குளிரும் போட்டி போட்டு முற்றுகை இட்டன. மரத்தடியில் கிடந்த சருகுகள், குப்பை, குச்சிக் கூளங்களைத் திரட்டினான். உள்ளங்கைகள் இரண்டையும் 'பரபர'வென்று தேய்த்தான். தீப் பற்றிக் கொண்டு எரிந்தது. சிறிது வெளிச்சமும் கிடைத்தது. இன்னும் குப்பை குச்சிகளைத் திரட்டி வந்து சேர்த்து எரிய விட்டான். குளிருக்கு இதமாக இருந்தது.

"ஏன் தம்பி, அப்பக் கேட்டப்போ தீப் பெட்டி இல்லேன்னே, இப்போ எப்படி பத்த வைச்சே?" என்று கேட்டபடி குளிர் காய வந்தது மீண்டும் அந்த உருவம். இப்பொழுது வெளிச்சத்தில் நன்றாகப் பார்க்க முடிந்தது. தலையில் தலைப்பாகை, முகத்தில் ரௌடிக் களை.

மாது ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் தீப்பெட்டி கேட்ட அதே ரௌடி தான். மாதுவுக்குத் தெரியாமல் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான் அவன். இருட்டில் பழகிப் போன அவன் கண்களுக்கு, மாது கைகளைத் தேய்த்து நெருப்புண்டாக்கிய காட்சி தெரிந்து விட்டது. அதை உறுதி செய்து கொள்ளவே அவன் நெருங்கி வந்து கேட்டான். மாது பதில் கூறாமல் மழுப்ப முயன்றதை ரௌடி புரிந்து கொண்டு விட்டான். மாதுவால் கைகளைச் சேர்த்து உரசி, நெருப்பை உண்டாக்க முடியும் என்பதை அவன் உறுதி செய்து கொண்டான்.

அதோடு, என்ன காரணத்தாலேயோ அவன் வீட்டை விட்டு, ஓடி வந்து விட்டவன் என்பதையும் புரிந்து கொண்டான். அவன் மனதில் மாதுவை வைத்துப் பணம் கொழிக்கும் திட்டம் ஒன்று தோன்றியது. மாதுவின் நட்பைப் பெற, தனது பையைத் திறந்து ஒரு பன்னையும், பாதி பிஸ்கட் பாக்கெட்டையும் எடுத்து வைத்தான். முதலில் மாது மறுத்தாலும், பசிக் கொடுமை வெல்ல, அவன் எடுத்துக் கொண்டு பசியாறினான்.

பொழுது விடிவதற்குள், ரௌடி தனது சகாக்கள் இருவரைக் கூட்டி வந்து விட்டான். மாதுவால் எத்தனை முயன்றும்

அவர்கள் பிடியில் இருந்து தப்ப முடிய வில்லை. அவர்கள் அடித்து உதைக்கவும் தயங்கவில்லை. புத்திசாலித்தனமாக அவர் கள் அவன் கைகளைத் தனித் தனியே கட்டி வைத்தனர். மாதுவுக்கு சாமியார் உடை தரப்பட்டது. சாமியார் உடை யணிந்து ரௌடியும் அவன் சகாக்களும் சிஷ்ய கோடிகள் ஆயினர். மாது, 'பாவங் களைப் பொசுக்கும் பால சித்தர்' ஆகிவிட, அவரை வழிபடும் சீடர்களாகினர் ரௌடி யும் அவன் சகாக்களும்.

மக்கள் தாங்கள் செய்த பாவங்களைக் கடிதத்தில் எழுதி, உறையிலிட்டு மூடி, ஐநூறு ரூபாய் காணிக்கையோடு பால சித்தர் பாதத்தில் வைத்தால், சிஷ்யகோடி கள் அந்த உறையை எடுத்து சித்தரின் கை களில் வைப்பார்கள். சித்தர் பாவங்களை மன்னிக்கும்படி இறைவனிடம் வேண்டி மன்றாட, இறைவன் அதை ஏற்று பாவங் களை மன்னித்ததற்கு அடையாளமாக பாவப்பட்டியல் உறையை எரிய வைத்து, சாம்பலாக்குவார். இந்த மாதிரி ஒரு அறி விப்பை புத்திசாலியான ரௌடியும் அவன் சகாக்களும் ஊர் ஊராகப் பரப்ப, கூட்டம் கூட்டமாக மக்கள் கூடத் தொடங்கினர். பணம் குவிந்தது. கண்ணுக் கெதிரே பாவப்பட்டியல் உறை, பால சித்தரின் வெற்றுக் கைகளில் வைக்கப் பட்டு, எரியும் காட்சி அறிவியல் ரீதியாக பார்க்காத மக்களால் தெய்வ சக்தி என்று நம்பப்பட்டதில் அதிசயம் இல்லை.

'இப்படி ஏமாறுகிறார்களே!' என்று பால சித்தராக இருந்த மாது பதைபதைத் தான். அதிலும் பாதகாணிக்கைகளுக்குக் கேட்டபடி பணம் ரூபாய் ஐநூறைத் திரட்ட, துணிமணி நகைகளைக் கூட விற்று ஏழைகள் வந்த காட்சி, அவனைப் பெரி தும் பாதித்தது. சாமியார் வேடத்தில் எளிய மக்கள் ஏமாறக் காரணமாக இருக் கிறோமே என்ற நினைப்பு அவன் மனதைக் கொத்தி வதைத்தது. ரௌடிகளுடன் ஒத்துழைக்க மறுத்தான்.

அவர்களா விடுவார்கள்? தினமும் ஆயிரக்கணக்கில் அல்லவா காணிக்கை வந்தது. மாது எங்கே திடீரென்று புரட்சி செய்து விடுவானோ என்ற பயத்தில் சிஷ்யன் வேஷத்தில் ஒரு முரடன் மாது வின் முதுகில் கத்தி முனையால் தொட்டு அழுத்தியபடி இருந்தான். இந்த மோசடிக் கும்பலிடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்தபடி நாட்களைக் கடத்தினான் பாலசித்தராக மாறியிருந்த மாது.

பால சித்தரைக் காண வந்த பலதரப் பட்ட மக்களுள் ஒருவராக பணம் பண்ணத் தெரிந்த சில புத்திசாலிகளும் இருந்தனர். அப்படிப்பட்ட புத்திசாலி தான் பூபதி. கள்ள நூறு ரூபாய் நோட்டு அடிக்கும் திட்டம் அவரிடம் தயாராக இருந்தது. இதற்கென்றே நடுக்காட்டில் ஒரு வீட்டை அவர் கட்டியிருந்தார். மிஷினை ஓட்ட அவருக்கு மின்சாரம் மட்டுமே தேவையாக இருந்தது.

மாது, உடம்பிலேயே மின்கலம் அமைந்த மின்கல மனிதன் (Human battery) என்பதை பூபதி பார்த்த மாத்திரத் திலேயே கண்டுபிடித்து விட்டார். அதோடு ரௌடிகள் கும்பலின் கட்டுப்



ரேவதி


பாட்டில் அவன் அடிமையாக இருப்பதையும் கண்டு பிடித்தார். எப்படியாவது மாதுவைக் கடத்திச் சென்றால் தனது கள்ள நோட்டடிக்கும் திட்டத்திற்குத் தேவைப் படும் மின்சக்தியைப் பெற அவன் பெரிதும் உதவக்கூடும் என்றும் அவர் திட்டம் போட்டார்.

பாவ விவர உறையோடு காணிக்கை தவிர இன்னொரு சீட்டும் இருப்பதை பாலசித்தர் மாது கவனிக்கத் தவற வில்லை. 'தப்பி வரத் தயாரா?' என்று அதில் ஆங்கிலத் தில் எழுதப்பட்டிருந்தது. காணிக்கைத் தொகையை எடுத்துக் கொள்வதிலேயே குறியாக இருந்த ரௌடி சிஷ்யக் கூட்டம் சீட்டை கவனிக்கவில்லை. பால சித்தர் மாது திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தான். எதிரே பணிவாக, பயபக்திக் கோலத்தில் பூபதி! சம்மதத்திற்கு அடையாளமாகத் தலையசைத்தான். பூபதி புன்னகையுடன் நகர்ந்தார்.

"பாவங்களைப் பொசுக்கும் பாலசித்தர் ஒரு நட மாடும் தெய்வம். அவரால் என் குடும்பப் பிரச் னைகள் தீர்ந்து, தொழில் பெருகி, சொந்தமாக தொழிற்சாலை கூடக் கட்டப் போகிறேன். அதற்கு அடிக்கல் நாட்ட பாலசித்தரே வர வேண்டும். பாத காணிக்கையாக பத்தாயிரம் ரூபாய் தருகிறேன்'' என்று பூபதி கேட்டபோது ரௌடி சிஷ்யர் கூட்டம் வாயைப் பிளந்தது. பாலசித்தரை அழைத்து வரச் சம்மதித்தது. அவரைத் தனது காரில் தானே அழைத்துச் செல்ல பூபதி விரும்பியதை அவர்களால் மறுக்க முடியவில்லை. பாத காணிக்கை பத்தாயிரம் ரூபாய் ஆயிற்றே?

குறிப்பிட்ட நாள் வந்தது. பூபதி ஓட்டிய காரில், இரு ரௌடி சீடர் களுக்கு இடையே கைதியைப் போல் பின் சீட்டில் பாலசித்தர் மாது இருந்தான். ஒரு காட்டுப் பாதை. கார் நின்றது. "ஐயா கொஞ் சம் இறங்கித் தள்ளணுமே?" என்று பூபதி வேண்ட இரு முரடர்களும் இறங்கித் தள்ளினர். கார், பால சித்தர் மாதுவுடன் பறந்தது!

முரட்டு ரௌடிகளின் பிடியில் இருந்து தன்னைக் காப்பாற்றியவர் என்ற நன்றி உணர்வோடு மாது, பூபதியின் வேண்டுகோளைக் கவனமாகக் கேட் டான். அவரது அச்சு எந்திரத்தை இயக்க இணங்கினான். தான் இருப்பது மாளிகைச் சிறை என்ற நினைப்பே எழாதபடி பூபதி அவனை நன்கு கவனித்துக் கொண்டார். அவன் கேட்டதெல்லாம் கிடைத்தது. அதோடு பூபதியின் பெண் தன்னை 'அண்ணா' என்று பாச உணர்வோடு அழைத்து விளையாடிய போது அவன் எதுவும்



செய்யத் தயாராக இருந்தான். தான் உதவிக் கொண்டிருப்பது, நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கும் தேசத் துரோகமான கள்ள நோட்டு அச்சடிப்புக்காக என்பதை அவன் தற்செயலாக அறிந்தபோது திடுக்கிட்டான். தொடர்ந்து, ஒத்துழைக்க மறுத்தான். பூபதி தனித் தனியாக அவன் கைகளைக் கட்டி வைத்து அடித்து உதைத்தார். மாது மறுத்தான். தனி அறைக்குள் அடைத்து பட்டினி போட்டார். "தேசத் தியாகி யாகா விட்டாலும் கண்டிப்பாகத் தேசத் துரோகியாக மாட்டேன்" என்று உறுதியாகக் கூறினான்.

சில நாட்களாக மாது தன்னுடன் விளையாட வராததைக் கண்டு சீதா அவனைத் தேடினாள். அப்பா பூபதியிடம் கேட்டாள். சரியான பதில் வரவில்லை. ஆனால் அடிக்கடி மாது அழும் சத்தம் கேட்கவே மறைந்திருந்து கவனிக்க ஆரம்பித்தாள். பூபதி தன் நண்பர்களுடன் வெளியே சென்றிருக்கும்போது மாதுவின் அறையைத்



திறந்தாள். "அப்பாவோடு சண்டை போடாதே மாது" என்று அவள் வேண்டிக் கொண்டபோது, அவள் தந்தை ஈடுபட்டுள்ள தேச விரோதச்

செயலை மாது விவரித்தான். அவன் திடுக்கிட்டாள். "என் கதியைப் பற்றிக் கவலை வேண்டாம், அண்ணா! என்னமாவது சாக்கு சொல்லி சமாளித்துக் கொள்கிறேன். தப்பிப் போய் விடு" என்று அவனை விடுவித்து, பணமும் தந்து, வழியையும் கூறி அனுப்பி வைத்தாள் ஈதா.

ஈதா செய்த உதவியால், திருச்சி செல்லும் பஸ்ஸில் டிக்கெட் வாங்கிப் பயணம் செய்து கொண்டிருந்தான் மாது. திருச்சியிலிருந்து எங்கே போவது என்பதைப் பற்றி அவன் ஒன்றும் முடிவு செய்யவில்லை. பெற்றோரிடம் சென்றால் மறுபடி மந்திரவாதியிடம் சிக்க வைத்து விடுவார்களோ என்ற பயம் இருந்தது.

மாதுவின் சீட்டுக்கு அருகே ஒருவர் கையில் பத்திரிகை வைத்திருந்தார். அதை வாங்கிப் பார்த்தான். 'மறுபடி மந்திரவாதியிடம் அனுப்பமாட்டோம் வீட்டிலேயே இருக்கலாம். திரும்பி வந்துவிடு, நீ இல்லையேல் நாங்கள் இல்லை' என்று அவன் பெற்றோர் கொடுத்திருந்த விளம்பரம் வெளியாகியிருந்தது. திருச்சியில் இருந்து வீட்டுக்கே போவதாக முடிவு செய்து கொண்டான்.

ஆவலாக வீட்டுக்கு வந்தபோது வீடு பூட்டியிருந்தது. மாதுவுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. எதிர் வீட்டுச் சிறுவன், "அண்ணா, காலையில்தான் உங்க அம்மா அப்பா இருவரையும் ஒரு மாமா வந்து காரில் கூட்டிக் கொண்டு போனார். அவர், நீ வந்தால் தரும்படி ஒரு கடிதம் தந்திருக்கிறார்" என்று ஒரு சீட்டைத் தந்தான்.

குழப்பத்தோடு மாது, சீட்டை வாங்கிப் பிரித்தான்; படித்தான்:

'நீ பெற்றோரைத் தேடி வருவாய் என்பது தெரியும். என்னிடம் இருந்து தப்ப முடியாது. நீ இல்லாவிட்டால் என்ன? உன் பெற்றோர் இப்பொழுது என்னிடம். அவர்கள் உயிருடன் இருக்க வேண்டும் என்பதற்காகவாவது நீ என்னுடன் இருந்து ஒத்துழைக்க சம்மதிப்பாய் அல்லவா? உன் வரவை எதிர்பார்க்கும் - பூபதி.'

மாது, என்ன செய்வது என்று தோன்றாமல் கண்கலங்க நின்றான்.

(வளரும்)



கோகுலம் க்விஸ்


1. கோலா கரடிகள் ____________ நாட்டில் வாழ்கின்றன.
2. ஒலிம்பிக்கில் வழங்கப்படும் தங்கப்பதக்கம் சுத்தமான தங்கம். சரியா, தவறா? ____________
3. குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கருத்தை வெளியிட்டவர் ____________
4. பால்பற்கள் என்பவை குழந்தைப் பருவத்தில் முளைக்கும் முதல்________பற்கள்.
5. உலகிலேயே மிகப் பெருங் காவியம் ____________
6. நீண்ட காலம் உயிர் வாழும் பிராணி ____________
7. சமீபத்தில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற இந்தியப் பெண்மணி ____________
8. வெறி நாய்க் கடிக்கு மருந்து கண்டுபிடித்தவர் ____________
9. ரோமன் நாட்டு கடல் தெய்வத்தின் பெயர் கொண்ட கோள் ____________
10. உலகிலேயே மிகப் பெரிய பறவை ____________

இங்கு பத்து கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. பத்து கேள்விகளுக்கும் சரியான பதில்களைக் கண்டுபிடித்து எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்ப வேண்டும். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்கு பரிசு வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி 30.4.99

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.





• பிரிட்டிஷ் வீடு

ஆதிகால மனிதன் தங்குவதற்கு குகைகளையும் பெரிய மரப் பொந்துகளையும் பயன்படுத்தினான்.

காலப் போக்கில் ஆற்றங்கரைகளில் தங்கிப் பயிர் செய்ய ஆரம்பித்தான். அப்போது தங்குவதற்கும் தானியங்களைச் சேமித்து வைப்பதற்கும் பாதுகாப்பான இடம் தேவைப்பட்டது.

பல்வேறு காலகட்டங்களைக் கடந்து

வந்த இன்றைய நாகரீக மனிதனின் வசிப்பிடங்களைக் காண்போம்.

❖ சில நூறு வருடங்களுக்கு முன் பிரிட்டிஷ் கிராமங்களில் இது (இடது) போன்ற வீடுகள் இருந்தன. இந்த வீடு எளிமையானது. வீட்டின் மேற்புறம்



• ஸ்விட்சர்லாந்து வீடு

வைக்கோல் மற்றும் நாணல்களை வைத்துக் கூரை வேயப்பட்டிருக்கும்.

❖ ஆப்பிரிக்காவில் பொதுவாகக் காணப்படும் மரபு வழியான வாழ்விடம் புல் குடிசை. காய்ந்த புற்களைக் கொண்டே இச் சின்னஞ்சிறு வீடு அமைக்கப்பட்டிருக்கும்.

❖ சாராவாக்கில் வாழும் 'டயாக்' இன மக்கள் நீண்ட வீடுகளில் வசிக்கின்றனர். ஒவ்வொரு அறைக்கும் இடையே வாழை இலைகளைத் தடுப்பாகப் பயன்படுத்துகின்றனர்.

• செவ்விந்தியர் கூடாரம்




வீடுகள் பலவிதம்!

மேற்கூரை மூங்கிலால் ஆனது. இவ்வீடுகள் நிலத்தில் கம்புகளை ஊன்றி சற்று உயரத்தில் கட்டப்படுகின்றன.

❖ பெரும்பான்மையான ஜப்பானியர்கள் தாள் வீடுகளையே பயன்படுத்துகின்றனர். கனத்த காகிதத்தில் சுவர் எழுப்பி அதில் மெலிதான மூங்கில் குச்சிகளை வைத்து கூரை போடுகின்றனர்.

❖ பனிப் பிரதேசங்களில் வாழும் எஸ்கிமோக்கள் அரைக் கோள வடிவிலான வீடுகளை உருவாக்கி அதில் வசிக்கின்றனர். வீடு முழுவதும் கடினமான பனிப்பாறைகளால் ஆனது. இந்த வீட்டிற்கு சிறிய சுரங்கம் போன்று வாயில் அமைத்து தவழ்ந்து செல்கின்றனர். வீட்டின் மேற்புறத்தில் வெளிச்சத்திற்காக சிறிய ஓட்டை போடப்பட்டிருக்கும்.



• ஜிப்ஸியர்களின் நகரும் வீடு

❖ சில செவ்விந்தியர்கள் கூம்பு வடிவக் கூடாரங்களைப் பயன்படுத்துகின்றனர். இக்கூடாரங்கள் மரப்பட்டைகள் அல்லது எருதின் தோலால் அமைக்கப்பட்டிருக்கும். வேட்டைக்குச் செல்லும் இடங்களில் இக் கூடாரங்கள் போடப்படுகின்றன.

❖ சுமத்ராவில் வாழும் மினான்ங்காபவ் இன மக்கள் உயரமான வீடுகளை



• சாராவாக் நீண்ட வீடுகள்



• ஆப்பிரிக்கப் புல் குடிசை



• ஜப்பானியர்களின் தாள் வீடு

அமைக்கிறார்கள். இவ்வீட்டிற்கு சிறிய ஏணி மூலம் ஏறிச் செல்ல வேண்டும். இதன் முகப்பு எருது போன்ற வடிவத்தில் காணப்படும்.

❖ ஐரோப்பாவில் வாழும் ஜிப்ஸி இன நாடோடி மக்கள் நகரும் வீடுகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த வீடு மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்டிருக்கும். இடம் விட்டு இடம் செல்ல நான்கு மரச் சக்கரங்களும் உண்டு.


❖ ஸ்விட்சர்லாந்து கிராமங்களில் அடுக்கு மாடி வீடுகளைப் பயன்படுத்துகிறார்கள். கீழ் தளம் மட்டும் கற்களால் கட்டப்பட்டிருக்கும். மாடிகள் மரத்தாலானவை. குளிர்காலங்களில் கால் நடைகள் கீழ்த் தளத்திலும் மனிதர்கள் மேல் தளத்திலும் வசிக்கின்றனர்.

❖ சீனாவின் சில பகுதிகளில் குகை வீடுகளில் மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். இவ்வீடுகள் வெயில்காலத்தில் குளுமையாகவும், மழைக் காலத்தில் கதகதப்பாகவும் இருக்கும்.



• அரபு கூடாரம்


❖ அரபு நாடோடிகள் பாலை வனங்களில் தங்கும்போது கூடாரங்களைப் பயன் படுத்துகின்றனர். இக் கூடாரம் முழுவதும் கம்பளியால் ஆனது. இவற்றை சுலபமாகக் கலைத்து வேறொரு இடத்திற்கு எடுத்துச் செல்லலாம்.



❖ மங்கோலியர்களின் கூடாரம் வட்ட வடிவமானது. கோடை காலத்தில் கூடாரம் பருத்தியாலும், குளிர் காலத்தில் கம்பளியாலும் அமைக்கப்படு கிறது.

❖ இந்தியா

• எஸ்கிமோக்கள் வீடு





வில் எண்பது சதவீத மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். ஏழை, எளிய மக்களின் வீடுகளும் எளிமையானதே!

❖ குடிசை வீடுகள் முற்றிலும் ஓலைகளால் வேயப்பட்டுள்ளன. இது எளிதில் தீப்பற்றிக் கொள்ளும். மழை, காற்றில் அடித்துச் செல்லப்படலாம்.

❖ சிந்துவெளி நாகரீகக் காலத்திலேயே சுட்ட செங்கற்களால் வீடு கட்டியிருந்தாலும், பொருளாதார வசதியின்மையால் இன்றும் இந்தியாவில் வெறும் மண்ணால் வீடுகள் கட்டப்படுகின்றன.

❖ செங்கல் வைத்து ஓடுகளால் வேயப்பட்ட வீடு ஓரளவு பாதுகாப்பானது.


❖ நடுத்தர மக்கள் பயன்படுத்தும் வீடுகள் ஓரளவு வசதி உடையது. வீட்டின் மேல் தளம் கான்கிரீட்டால் ஆனது.

❖ நகரங்களில் நிலத்தின் விலை உயர்வு காரணமாக சிறிய நிலப்பரப்பில் நிறைய பேர் வாழ அடுக்குமாடி வீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

❖ பணம் படைத்தவர்கள் வசதியாக வாழ பெரிய நிலப்பரப்பில் தோட்டங்களுடன் கூடிய பங்களாக்களை அமைத்துக் கொள்கின்றனர்.



• மினான்காபவ் வீடு




• ஓட்டு வீடு



• இந்திய வீடுகள் ஓலை குடிசை




• சீனாவின் குகை வீடு



• மங்கோலியர் கூடாரம்

சாதனை மன்னன் கும்ளே!



1956 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஜிம் லேகர் ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக 10 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அது நிகழ்ந்து 43 ஆண்டுகள் ஓடிவிட்டன.

பிப்ரவரி 7, 1999 டெல்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானம். பாகிஸ்தானின் தொடக்க ஆட்டக்காரர்கள் 101 ரன்கள் சேர்த்து விட்டனர். யாரும் 'அவுட்' ஆகக் காணோம். கும்ளே முதல் விக்கெட்டை வீழ்த்தினார். இரண்டாவது விக்கெட்டை வீழ்த்தினார். மூன்றாவது, நான்காவது... ஒன்பதாவது, பத்தாவது விக்கெட்டையும் அவரே வீழ்த்தினார். 74 ரன்கள் கொடுத்து பத்து விக்கெட்டுகளையும் அனில் கும்ளே வீழ்த்தியதால், 19 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தான் அணியை டெஸ்ட் போட்டியில் வென்றிருக்கிறது இந்தியா.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளையும் வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற சிறப்பும் கும்ளேவுக்குக் கிடைத்துள்ளது.

பின் குறிப்பு: 1983 ஆம் ஆண்டு அஹமதாபாத்தில் மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், கபில்தேவ் 83 ரன்களுக்கு 9 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தது - முந்தைய இந்தியச் சாதனை.

— விளையாட்டுப் பையன்

கோழி பறக்காதது ஏன்?

எஸ். சுஜாதா



கோழியைப் பார்க்காதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். சின்னஞ் சிறிய, பஞ்சு போல் மென்மையான இறகுகளுடைய குஞ்சுகள் தாயுடன் நடந்து செல்வதைப் பார்த்தால் மிகவும் அழகாக இருக்கும்.

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே சிந்து வெளிநாகரிகத்தின் போதே கோழிகள் காடுகளில் வாழ்ந்துள்ளன. காட்டுக் கோழிகளைப் பழக்கி மக்கள் வீடுகளில் வளர்த்துக் கொண்டார்கள்.

இந்தியாவில் இருந்துதான் பிற ஆசிய, அரபு நாடுகளுக்குக் கோழிகள் கொண்டு செல்லப்பட்டன. அரபு நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றன.

இன்று உலகம் முழுவதும் வீடுகளில் வளர்க்கப்படும் முக்கியமான பறவைகளில் முதலிடம் வகிப்பது கோழிதான்!

காடுகளில் வாழ்ந்த போது கூடுகட்டி வாழ்ந்ததுண்டு. ஆனால் இன்று வீடுகளிலும் பண்ணைகளிலும் வளர்க்கப்படுவதால் கூடு கட்டும் வேலையே இல்லாமல் போய் விட்டது கோழிகளுக்கு.



கோழியின் உடல் கனத்திருப்பதால் அதிக உயரம் பறக்க இயலாது. ஆனால் விரைந்து ஓடும். சிறகுகள் குறுகலாகவும் வலிமை குன்றியும் இருக்கும்.

கால் மூட்டு வரை இறகுகள் முளைத்திருக்கும். மூட்டுக்குக் கீழே செதில்களால் கால்கள் மூடப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்கள் உண்டு. பெருவிரல் பின்





...நோக்கியும்
மற்ற மூன்று விரல்கள் முன் நோக்கியும் அமைந்திருக்கின்றன. உறுதியான நகங்களால் நிலத்தைப் பிறாண்டுவது இதன் வழக்கம்.

கோழி உறங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் எல்லாம் இரை தேடி அலைந்து கொண்டிருக்கும். இவற்றின் அலகு உறுதியானது. தானியங்கள், பழங்கள், குருத்து, புழு, பூச்சிகளைக் கொத்தி விழுங்கக் கூடியவை. உணவை வேகமாக ஜீரணம் ஆக்கும் சக்தி கோழிகளுக்கு உண்டு.

கோழிக்குத் தலையில் சிவப்பான கொண்டை இருக்கும். கோழியின் கொண்டையை விட சேவலின் கொண்டை பெரியது. கோழி கொக்கரிக்கும். சேவல் கூவும். சேவல் பிரகாசமான வண்ணங்களில் மிடுக்காக காட்சி தரும். கோழி மங்கலான நிறத்திலேயே காணப்படும்.

சேவல் கூவி பொழுது விடிவதாக சிலர் கருதுகிறார்கள். பொழுது விடிவதால்தான் சேவல் கூவுகிறது. எல்லா பறவைகளுமே பொழுது புலர்ந்ததும் குரல் கொடுக்கக் கூடியவையே. சேவலின் கூவல் பெரிதாக இருப்பதால் நாம் சேவல் மட்டுமே கூவக் கூடியது என்று நினைக்கிறோம். 'இது என்னுடைய எல்லை. இங்கு மற்றவர்கள் நுழையக் ...ாது' என்று மற்றவர்களுக்கு ...ார்ந்த சேவல் விடுக்கும் ...ரிக்கையே இது.

...ரு சேவலோடு பல பெண் ...ழிகள் சேர்ந்து வாழும். ...ண் கோழிகளுக்குள் ஒரு ...லைவி இருக்கும். புதிதாக ...பெண் கோழிகள் கூட்டிற்கு வந்தால் சண்டைதான்! ஒன்றை ...று அலகால் கொத்திப் போடும். ...ண்டையில் எது வலிமையான கோழி என்பதை மற்ற கோழிகள் புரிந்து கொண்டு அந்தக் கோழிக்கே தலைமைப் பொறுப்பைக் கொடுத்து விடுகின்றன.

பெண் கோழி அடைகாத்த 21 நாட்களில் குஞ்சு பொரிக்கும். ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியே வரும் குஞ்சுகள், உடலோடு முடிகள் ஒட்டி



ஈரமாக காட்சி தரும். சிறிது நேரத்தில் ஈரம் காய்ந்து மென்மையான முடிகளோடு நடக்க ஆரம்பித்து விடும்.

குஞ்சுகள் தாயுடன் சேர்ந்து இரை தேடுகின்றன. கழுகு போன்ற எதிரிகள் குட்டியைத் தாக்காமலிருக்க தாய் கண்காணித்தபடியே இரை தேடும்.

அடை காத்தல், குஞ்சுகளுக்கு உணவூட்டுதல், பாதுகாத்தல் போன்ற எந்த வேலையையும் சேவல் செய்யாது.

முன்பெல்லாம் ஒரு கோழி ஆண்டிற்கு சராசரியா 30 முட்டைகளே



இடும். ஆனால் இன்று 250 முட்டைகள் இடக்கூடிய அளவிற்கு உயர்தர கோழிகள் உள்ளன.

கோழிகளால் எந்தத் தட்ப வெப்ப நிலையிலும் வாழ முடியும். அதனால்தான் உலகம் முழுவதும் காணப்படுகின்றன.

மனைக்கோழி, காட்டுக் கோழி, வான் கோழி, மயில், காடை, கவுதாரி போன்ற பறவைகளும் கோழி இனத்தைச் சேர்ந்தவையே.

கோழி அடைகாத்துதான், குஞ்சு பொரிய வேண்டிய அவசியம் இன்று இல்லை. அடைகாப்பதற்கென 'அடைக் காக்கும் பெட்டி' என்னும் சாதனம் பயன்படுத்தப்படுகிறது.

கோழி வளர்ப்பு செலவு குறைந்த லாபகரமான தொழிலாக கருதப்படு கிறது. எனவே பெரிய பண்ணைகள் வைத்து ஆயிரக்கணக்கான கோழிகளை வளர்க்கிறார்கள்.

கோழிகள் இறைச்சிக்காகவும், முட்டைக்காகவுமே வளர்க்கப்படுகின்றன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் முட்டைக்கும் இறைச்சிக்கும் தனித்தனியே கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

முட்டைக்காக வளர்க்கப்படும் கோழிகளிலிருந்து குஞ்சுகளைப் பெறுவதில்லை. இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழியிலிருந்து




முட்டைகளைப் பெற இயலாது.


- **கோழிகளுக்கு ராணிக்கெட், சுவாசக் குழல் தொற்று நோய், காலரா, வெள்ளைக் கழிச்சல், டைபாய்டு, பாட்டுலிசம், காக்சிடியோசிஸ் போன்ற நோய்கள் வருகின்றன.**

- இந்தியா, சீனா, மலேசியா போன்ற நாடுகளில் இன்றும் பலர் கோழிச் சண்டையை பொழுது போக்காகச் செய்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் கோழிச் சண்டை சட்ட விரோதமானது. ஸ்பெயின் நாட்டில் கோழிச் சண்டை இன்றும் நடைபெற்று வருகிறது.

- கோழிக் கூண்டு காற்றோட்டமாக, ஈரமற்று சுத்தமாக இருக்க வேண்டும். பாம்பு, கீரி போன்றவை நுழையாதபடி அமைக்க வேண்டும். பாத்திரத்தில் தண்ணீர் வைக்க வேண்டும்.





கதை :
வி.ஆர். கிருத்திகா
நட்புக்காக
படம் :
சசி
காட்டில் ஒரு நாள் –
பொல்லாத புலி வருது. ஓடுங்க...
ம்... சீக்கிரம்!
சோனு வேடிக்கை பார்க்காமல் சீக்கிரம் வா.
பின்னாலேயே வரேன்.
சோனு மறைவில் நின்றது.
இந்தப் புலிக்கு எவ்வளவு கம்பீரம்! மிடுக்கான நடை.
மறுநாள் –
என்ன சோனு யோசிக்கறே?
எனக்காக ஒரு உதவி செய்வியா?
என்ன சொல்லு?
நம்ம காட்டில் உலவுதே ஒரு புலி, அதுகிட்டே நட்பு வைக்க விரும்பறேன்.
உனக்கென்ன பைத்தியமா?
எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு.
உயிர் மேல ஆசை இல்லையா?
என்றைக்காவது சாகத்தான் போறோம். எனக்காக...


என்ன செய்யணும்?
நீ என் விருப்பத்தைப் புலி கிட்டே சொல்.
கிளி சென்றது.
புலியாரே! நான் சோனுவுக்குத் தூது வந்திருக்கேன்.
சோனுவா யார் அது?
அது ஒரு மான். உங்களிடம் நட்பு வைக்க விரும்புது.
என்ன! என்னிடம் நட்பா? பார்த்தாலே பயந்து ஓடுமே மான்கள்.
உங்கள் வீரம் சோனுவுக்குப் பிடித்திருக்காம்!
சரி வரச் சொல்.
என் நண்பனுக்கு ஆபத்தில்லையே?
என்னை நீ நம்பலாம். இன்று மாலையே வரச் சொல்.
கிளி திரும்பியது.
என்ன வெற்றியா?
ம். இன்று மாலையே நீ புலியாரைச் சந்திக்கலாம்.
மாலையில் –
சோனு போகாதே. உயிருக்கு ஆபத்து.
பயப்படாதீங்க, வரேன்.
வணக்கம் புலியாரே!
வா சோனு. என்னை விட உன் தைரியம்தான் பெரிது.


புலியாரும் சோனுவும் நெருங்கிய நண்பர்களானார்கள். ஒரு நாள் –
என்ன புலித்தம்பி, சோர்வா இருக்கே?
ரொம்ப பசி.
உன் கண் எதிரில்தான் கொழுத்த மான்கள் மேய்கிறதே. அப்புறம் என்ன?
சோனு என் நண்பன் என்றால் அவன் உறவினர்களும் நண்பர்கள்தானே!
இவங்க நட்பை எப்படியாவது பிரிக்கணும்.
மறு வாரம் –
என்ன கரடியாரே இப்படி ஓடி வருகிறீர்கள்?
அந்த சோனு என்ன சொல்கிறது தெரியுமா?
என்ன சொல்கிறது?
உனக்கு மான்களிடம் பயமாம்! அதனால்தான் நீ மான்களை வேட்டையாடுவதில்லையாம்!
உண்மையில் சோனு என் உணவு விஷயத்தில் தலையிடுவதில்லை. இருந்தாலும் விசாரிக்கிறேன்.
நான் வரேன்.


சிறிது நேரத்தில் –
சோனு உன் உயிருக்கு ஆபத்து!
என்ன சொல்றீங்க?
புலி இன்று உன்னை சாப்பிடப் போகுதாம்!
என் நண்பர் மான்களைச் சாப்பிடுவதை விட்டுட்டார். அப்படியேயானாலும் நட்புக்காக உயிர் இழக்கத் தயார்.
அப்போது –
கரடியாரே உமக்கேன் இந்த வேலை?
இந்த சோனு....
உன் நாடகம் எனக்குப் புரிந்து விட்டது. உன்னை என்ன பண்றேன் பார்.
வேண்டாம். கரடியாரை விடுங்கள்.
உன் பேச்சில் நம்பிக்கை இல்லாமல்தான் பின்னாலேயே வந்தேன். ஓடி விடு.

ஓவியப் போட்டி முடிவுகள்



ஆறுதல் பரிசு

மோனாலிசா எடின்பரோ,
வடக்கன்குளம்,
நெல்லை மாவட்டம்



முதல் பரிசு

பி. சார்ஜ் ஸ்ரீஜெயன்
சேலம்





இரண்டாம் பரிசு

பி. அறிவுக்கரசன்,
ஏழாம் வகுப்பு,
எஸ்.ஆர்.கே.வி. குருகுலம்,
உளுந்தூர்பேட்டை

மூன்றாம் பரிசு

பா. விஜயபார்வதி,
பதினோராம் வகுப்பு,
கே.ஜி.எஸ். மேல்நிலைப்பள்ளி,
ஆடுதுறை





ஆறுதல் பரிசு

கே. மதியழகன்,
பத்தாம் வகுப்பு,
அண்ணா அரசு
மேல்நிலைப்பள்ளி,
பட்டீஸ்வரம்,
கும்பகோணம்

சர்க்கரை நோய் உள்ளவர்கள் ரத்ததானம் செய்யலாமா?

டாக்டர். கு. கணேசன்



● க. அறிவழகன், திருக்கண்டீஸ்வரம்.

? சர்க்கரை நோய் உள்ளவர்கள் ரத்த தானம் செய்யலாமா, டாக்டர்?

! செய்யலாம், தம்பி! சர்க்கரை நோய் உள்ளவர்களுக்குக் கணையத்தில் (PANCREAS) 'இன்சுலின்' என்ற இயக்குநீர் குறைவாக சுரக்கும்; இதன் விளைவாக ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரித்து விடும். இவர்களுக்கு அடிப்படைக் கோளாறு கணையத்தில்தானே தவிர ரத்தத்தில் இல்லை. ஆகையால், சர்க்கரை நோயாளிகளும் ரத்ததானம் செய்யலாம்.

● காழி. ஆர். சீதாராமன், சீர்காழி.

? டாக்டர்கள் ஒருமுறை பயன்படுத்திய ஊசியை வெந்நீரில் போட்டு விட்டு, பின்பு எடுத்துப் பயன்படுத்துகிறார்களே... எதற்காக, டாக்டர்?

! ஊசிகளை சுத்தப்படுத்துவதற்கும், கிருமி நீக்கம் செய்வதற்கும் அவற்றை வெந்நீரில் போடுகிறார்கள். இன்னும் சரியாகச் சொல்வதென்றால் ஊசிகளை வெந்நீரில் போட்டு குறைந்தது 20 நிமிடம் கொதிக்க வைக்க வேண்டும். அப்போதுதான் ஊசியில் உள்ள கிருமிகள் மடியும். பின்பு அந்த



ஊசியை அடுத்தவர்களுக்குப் பயன்படுத்தும் போது கிருமிகள் பரவாது; நோய்த் தொற்று ஏற்படாது. ஆனால், அண்மைக் காலமாக 'எய்ட்ஸ்' அபாயம் பெருகி வருவதால் பெரும்பாலான மருத்துவர்கள் இம்மாதிரி கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஊசிகளுக்குப் பதிலாக, ஒரே ஒருமுறை மட்டும் பயன்படுத்தி விட்டு நிராகரிக்கக்கூடிய 'டிஸ்போசபள் சிரிஞ்ச்'களையே நோயாளிகளுக்கு உபயோகிக்கிறார்கள். இப்போதைக்கு ஊசி போடுவதற்கு இதுவே சிறந்த முறை.

● க. பிரஸாத், திருவானைக்கோவில்.

● அ. ஹாஜா ஹஜீமுதீன், மதுக்கூர்.

● மு. வீரமணி, தாசம்பட்டி.

? முகத்தில் அதிகமாகப் பருக்கள் வருகின்றன. இதற்கு காரணம் என்ன? இவற்றை எப்படி போக்குவது?

! முகத் தோலின் கொழுப்புச் சுரப்பிகளிலிருந்து 'சீபம்' என்ற எண்ணெய்ப் பசை வெளியேறுகிறது. இது முகத்தோலைப் பளபளப்பாக வைத்திருக்க உதவுகிறது. பருவ வயதில் ஆண், பெண் இருபாலருக்கும் 'ஆன்ட்ரோஜன்' என்ற இயக்குநீர் சுரப்பது அதிகமாகிறது. இது 'சீபம்' சுரப்பதையும் மிகைப்படுத்துகிறது. இதன் காரணமாக வழக்கத்திற்கு அதிகமாக சீபம் தோலில் படிந்து, உருண்டு, திரண்டு ரவை போன்ற முகப் பருக்களை உண்டாக்குகின்றன. முகத்தில் அழுக்கு சேர்ந்தால்





இவை மிளகு அளவிற்கு வீங்கி விடும்; பாக்டீரியா கிருமிகள் தொற்றிக் கொண்டால் பட்டாணி அளவிற்குப் பெரிதாகி விடும். பருக்களைப் போக்கவும் வராமல் தடுக்கவும் சில யோசனைகள்... 1. முகத்தை சோப்புப் போட்டு வெதுவெதுப்பான தண்ணீரில் அடிக்கடி கழுவுங்கள். 2. முகப் பவுடர், அழகு சாதனக் களிம்புகள் வேண்டாம். 3. கொழுப்பு உணவு, அசைவ உணவு (நெய், வெண்ணெய், பாலாடை, கேக், ஐஸ்கிரீம், சாக்லேட், புட்டிங்க்ஸ், முட்டை, இறைச்சி) வேண்டவே வேண்டாம். 4. கீரை மற்றும் காய்கறிகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். 5. பருக்களைக் கிள்ளாதீர்கள். 6. பருக்களின் மேல் பூசுவதற்கு மருத்துவரின் யோசனையில் ஒரு களிம்பு வாங்கி உபயோகியுங்கள்

- **எம். எம். ஆனந்தன், வந்தவாசி.**

? பல் சொத்தைக்கும் காய்ச்சல் வருவதற்கும் என்ன தொடர்பு?

! நோய்க் கிருமிகள் பற்களைத் தாக்கும் போது ஏற்படுகின்ற ஓர் அழற்சி நோய்தான், பல் சொத்தை! நம் உடம்பில் எங்கு அழற்சி ஏற்பட்டாலும் உடனே அதனருகில் உள்ள நிணநீர்ச் சுரப்பிகள் வீங்கி நெறிகட்டுவது இயல்பு. பல் சொத்தை ஏற்படும் போது கீழ்த்தாடையும் கழுத்தும் இணைகின்ற இடத்தில் நெறி கட்டும். இதன் விளைவாகக் காய்ச்சல் வரும். தகுந்த மருந்துகளை சாப்பிட்டாலோ, சொத்தைப் பல்லை அகற்றி விட்டாலோ காய்ச்சல் குணமாகி விடும்; நெறிக்கட்டி மறைந்து விடும்.



- **கே. ஆர். கிருஷ்ணசாமி, நாராயணத்தேவன்பட்டி.**

? 'செலக்டிவ் அம்னீஷியா' என்பது என்ன? இந்த நோயின் தன்மை என்ன?

! மருத்துவ அகராதியில் 'செலக்டிவ் அம்னீஷியா' என்று தனிப்பட்ட நோய் எதுவும் இல்லை. 'அம்னீஷியா' (AMNESIA) என்பது மறதிநோயைக் குறிக்கும்.

- **ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.**

? பெரியவர்களுக்குக் காய்ச்சல், சளி போன்றவை ஏற்படும் போது கொடுக்கப்படும் மாத்திரைகளைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாமா?

! கொடுக்கக் கூடாது. பெரியவர்களுக்குத் தரப்படும் மருந்தின் அளவு அவர்களுடைய உடல் எடையையும் நோயின் தன்மையையும் பொறுத்தது; அதே மருந்தைக் குழந்தைகளுக்குத் தரும்போது அளவு அதிகமாகி விடும்; அளவுக்கு மீறினால் அமிர்தமே நஞ்சாகும் போது மருந்து எம்மாத்திரம்? கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகிவிடும். எச்சரிக்கை தேவை.

- **டி. ஆல்வின், ஐரேனிபுரம்.**

? நமக்குள்ள இரண்டு சிறுநீரகங்களில் எது முதலில் இயங்குகிறது? ஒன்று பழுதாகி விட்டால் அடுத்தது தானே இயங்கி விடுமா? இதில் ஆளுக்கு ஆள் வேறுபாடு உண்டா?

! தம்பி, ஆல்வின்... உன் இரண்டு கண்களால் ஒரு பொருளைப் பார். எந்தக் கண் முதலில் பார்க்கிறது? உன் இரண்டு காதுகளால் ஒரு ஒலியைக் கேள். எந்தக் காது முதலில் கேட்கிறது? இரண்டு கண்களும் ஒரே நேரத்தில்தான் பார்க்கும்; இரண்டு காதுகளும் ஒரே நேரத்தில்தான் கேட்கும். இல்லையா? இது போலத்தான் நம் இரண்டு சிறுநீரகங்களும் ஒரே சமயத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கும். முதலாவது, இரண்டாவது என்ற பேச்சுக்கு இடமில்லை; ஆளுக்கு ஆள் வேறுபாடு என்று எதுவுமில்லை. ஒரு சிறுநீரகம் பழுதாகி விட்டால் அதன் வேலையையும் சேர்த்து இரண்டாவது சிறுநீரகம் பார்த்துக் கொள்ளும். இரண்டும் பழுதாகி விட்டால் வேறு சிறுநீரகத்தைப் பொருத்த வேண்டும்.



குருத்ருகனும் மான்களும்


"குருத்ருகா! நேற்று முழுவதும் பட்டினி இன்று ஏதாவது ஆகாரம் சாப்பிடா விட்டால் இறந்து விடுவோம்" என்றனர் அந்த வேடனின் பெற்றோர்.

குருத்ருகனுக்கும் பசி குடலைச் சுருட்டியது. வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். 'என்னவாயிற்று? மிருகங்களெல்லாம் வேறு காடு தேடிப் போய் விட்டனவா!'' என்று யோசித்தபடியே காடு முழுவதும் அலைந்தான்.

அன்றும் ஒரு சிறு பறவை கூட அவன் பார்வைக்கு அகப்படவில்லை! சூரியன் அஸ்தமிக்கத் தொடங்கினான். ஒரு பெரிய ஏரியைக் கண்டான். பசி தெரியாமலிருக்க நிறையத் தண்ணீரை அள்ளி அள்ளிக் குடித்தான்.

'தண்ணீர் குடிக்க ஏதாவது மிருகங்கள் வரும்' என்று அருகிலிருந்த ஒரு பெரிய வில்வ மரத்தில் பதுங்கிக் கொண்டான். வில்வ மரத்தடியில் ஒரு சிவலிங்கமும் இருந்தது. தூங்கிவிடக் கூடாதே என்று வில்வ இலையைப் பிடுங்கி எறிந்து கொண்டிருந்தான். அது சிவலிங்கத்தின் மேல் விழுந்து கொண்டிருந்தது.

அப்போது ஒரு பெண்மான் தண்ணீர் குடிக்க வந்தது. குருத்ருகன் பெரு மகிழ்ச்சியோடு வில்லில் அம்பைப் பொருத்தினான். அந்த அசைவில் அவனது குடுவையிலுள்ள



ஆர். பொன்னம்மாள்

நீர் தளும்பி மரத்தடியில் இருந்த சிவ லிங்கத்தின் மேல் விழுந்தது.

மரத்தடி சலசலப்பு மானைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"வேடனே! மிருகங்களைக் கொல்வது உனது தொழில். அதை நான் தடுக்கவில்லை. ஆனால் நான் குட்டி போட்டு சில நாட்களே ஆகின்றன. என் குட்டியை வேறொரு மானிடம் ஒப்படைத்து விட்டு வருகிறேன்" என்றது.

வேடன் தனது பெற்றோரின் பசியை எண்ணி ஒப்புக் கொள்ள மறுத்தான்.

"ஓடி விடுவதற்காக சாதுர்யம் போககிறாய்! நீயாவது, திரும்பி வருவதாவது!" என்றான்.

மான் "ஐயா! புலி, சிங்கம், போன்ற மிருகங்களுக்கு என்றாவது ஒருநாள் இரையாகும் ஜென்மம் நான்! சத்திய வாக்குத் தவறாதவள்; புத்திர பாசத்தால் கெஞ்சுகிறேன். கல்வி கற்கும் வயதில் படிக்காமல் சோம்பேறியாய் ஊர் சுற்றிய பாவம், பெற்றோரின் உழைப்பை



வீணாக்கிய பாவம், வாக்குத் தவறினால் என்னை வந்து அடையட்டும்'' என்று சூளுரைத்தது.

இரக்கம் கொண்ட வேடன் மானைப் போக அனுமதித்தான்.

'அடாடா! மானின் சொற்சாமர்த்தியத்தில் ஏமாந்து விட்டோமோ' என்று வருந்தினான்.

இரண்டாம் ஜாமத்தில் இன்னொரு பெண்மான் வந்தது. இப்போதும் நீர் தளும்பி சிவலிங்கத்தின் தலையில் விழுந்தது. இரண்டாவது மானும் வேடனைப் பார்த்து,

''ஐயா! வேட்டையாடுவது உன் பிழைப்பு! அதை வேண்டாமென்று சொல்லவில்லை. பிரசவித்த என் சகோதரி குட்டியை விட்டுச் சென்று வெகு நேரமாகிறது. காணோமே என்று தேடிக் கொண்டு வந்தேன். என் குட்டிகளும் தானாக இரை தேடும் அளவு வளரவில்லை. என் சகோதரி வந்ததும் சொல்லிக் கொண்டு வருகிறேன்'' என்றது.

வேடன் கேலியாகச் சிரித்தான்.

"என் முகத்தில் அசடு என்று எழுதியா ஒட்டியிருக்கிறது. வருகிற மிருகங்களெல்லாம் சாக்குச் சொல்கிறீர்கள்! உன்னிடம் நான் ஏமாறப் போவதில்லை! என் பசி பொறுப்பேன்; என் தாய் தந்தையர் பசியை என்னால் தாங்க முடியாது. உன்னை விழ்த்துவேன்'' என்றான்.

மான் மகிழ்ச்சியுடன் "பெற்றோர் மீது நீ கொண்ட பரிவு உன்னைக் கட்டாயம் ஒரு நாள் உயர் நிலைக்குக் கொண்டு வரும். ஆனால் என் நிலையையும் நீ புரிந்து கொள். வன விலங்குகள் எங்களின் இளம் குட்டிகளைக் கொன்று விடுமே என்று மனம் பதைபதைக்கிறது. வாக்குத் தவறினால் குருவை அவமதித்த பாவமும், பிராணிகளை சித்திரவதை செய்த பாவமும் என்னைச் சேரட்டும். கருணை காட்டு'' என்று இறைஞ்சியது. சற்றே யோசித்த வேடன் சம்மதம் தந்தான். மான் போய் விட்டது.


'என்னைப் போன்ற மடையன் பூலோகத்தில் தேடினாலும் கிடைக்க மாட்டான்! கை நழுவ விட்டுவிட்டு காத்துக் கிடக்கிறேன்' என்று வேதனைப்பட்டான் குருத்ருகன்.

மூன்றாம் ஜாமம். உறங்காதிருப்பதற்காக கிள்ளிப் போட்ட இலைகள் சிவலிங்கம் தெரியாத அளவு குவிந்திருந்தன. அந்தச் சமயம் கொழுத்த ஆண்மான் ஒன்று வந்தது.

அம்பெய்யும் சமயம் அதுவும் தடுத்துப் பேசியது: ''வேடரே! நான் உணவு கொண்டு வருவேனென என் மனைவியும் மூன்று இளம் குட்டிகளும் காத்திருக்கும். நான் போய் விபரம் சொல்லிவிட்டு வருகிறேன்'' என்றது.

வேடன் "இப்படிச் சொல்லிச் சென்ற எந்த மிருகமும் இதுவரை திரும்பவில்லை! உன்னையும் விட்டு விட்டால் இன்றும் என் பெற்றோரைப் பட்டினி போட்ட பாவத்துக்கு நான் ஆளாவேன்!" என்றான்.

ஆண்மான் "பிறர் பசி என்னால் தீரும் என்பதைக் கேட்கவே சந்தோஷமாயிருக்கிறது! ஆனால் சிவராத்திரியான இன்று நான் சத்தியம் தவறுவேன் என்று நீங்கள் நினைத்தது தான் என் மனதை வாட்டுகிறது. எத்தனை அலை அடித்தாலும் கடல் கரையைக் கடப்பதில்லை! எத்தனை தோண்டினாலும், வெட்டி உழுதாலும், பூமி மனிதர்களை தண்டிப்பதில்லை. அனைத்தும் சத்தியத்துக்குக் கட்டுப்படும் போது நான் மட்டும் அதை மீறுவேனா? பெரியவர்களை மதிக்காத பாவமும், பெற்றோர் சொல் கேட்காத



''உங்க அண்ணன் பேரைக் கேட்டாலே பயந்து நடுங்குவேன்னு சொல்றியே, என்ன பேரு?''

''மாத்ரு 'பூதம்'!''

– எஸ். தீபன் சக்கரவர்த்தி

பாவமும் சத்தியம் தவறினால் என்னை வந்து வருத்தட்டும்" என்று கண் கலங்கிக் கூறவும், குருத்ருகன் மனம் இளகி மானைப் போக அனுமதி தந்தான்.

ஆண்மானைக் கண்ட முதல் பெண்மான் "நான் போகிறேன். வேடனுக்கு முதலில் வாக்களித்தவள் நானே! என் குட்டியைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றது.

இரண்டாவது மான் "நான் மட்டும் வாக்குத் தவறுவேனா? என் குட்டிகள் சற்றுப் பெரியவை. உன் குட்டி பால் குடிக்கும் பருவத்திலிருக்கிறது. அதைக் காப்பாற்றுவது கடினம். அதனால் நான் போவதே பொருத்தமானது"என்றது.

ஆண்மான் "உங்கள் இருவரையும் காக்கும் கடமை தலைவனான எனக்குண்டு. அதனால் நீங்கள் உங்கள் குட்டிகளுடன் இங்கிருங்கள். நான் போவதே உசிதம்" என்றது.

'கணவரைக் காப்பது மனைவியின் பொறுப்பு' என்று வாதிட்டன பெண் மான்கள். கடைசியில் வேறொரு முதிய மானிடம் குட்டிகளை ஒப்படைத்து விட்டு மூன்றுமே வேடனிருக்குமிடத்துக்கு ஓடி வந்தன. அப்போது நான்காம் ஜாமமாகிவிட்டது.

அதைக் கண்ட வேடன் தொப்பென்று மரத்திலிருந்து குதிக்க குடுவை நீர் முழுவதும் தலை கிழாக சிவலிங்கத்தின் மேல் கொட்டி வில்வ இலைகள் பொல பொலவென உதிர்ந்தன.


சிவராத்திரி அன்று நான்கு ஜாமமும் விழித்திருந்து, பட்டினிகிடந்து, சுத்த நீரால் அபிஷேகித்து, வில்வ அர்ச்சனை செய்த புண்ணியத்தால் வேடனுக்குக் கொல்லும் குணம் மறைந்தது.

'பகுத்தறிவற்ற மிருகங்கள் சத்தியம் காக்க ஓடி வந்திருக்கின்றன. மனிதனாகப் பிறந்த நான் மிருகங்களைக் கொன்று புலால் உண்ணலாமா? விறகு வெட்டியாவது என் பெற்றோரின் பசி தீர்ப்பேன்' என்று தீர்மானித்து வில்லை ஒடித்து எறிந்தான்.

மான்களைப் பார்த்து "உங்களது சத்தியமே என்னை மாற்றியது! இனி நான் ஜீவ வதை செய்ய மாட்டேன். இது சத்தியம்" என்றான்.

சிவபெருமான் உடனே தோன்றி "குருத்ருகன் என்ற உன் பெற்றோரிட்ட பெயரில் முதல் எழுத்தும், கடைசி இரண்டு எழுத்துகளும் சேர்ந்து இனி என் மகனான குகனைப் போல் நீயும் பெருமை பெறுவாய்! தசரத குமாரனாய் பிறந்த ஸ்ரீராமன் உன்னை சகோதரனாகவே ஏற்றுக் கொள்வார். எல்லாம் உன் சிவ ராத்திரி விரத மகிமை" என்று அருளினார்.

கு(ருத்ரு)கன் அன்று முதல் கங்கையில் ஓடம் விட்டு பிழைப்பு நடத்தினான். நாளடைவில் அவனது நல்ல குணம் கண்டு வேடர்களெல்லாம் குகனைத் தங்கள் தலைவனாக்கினர்.



கோழிக் குஞ்சு!

கோழிக் குஞ்சு வந்தது,
கொத்த அரிசி கேட்டது.
காலி வயிற்றைக் காட்டியே,
கருணை காட்டச் சொன்னது.

கொஞ்சம் தீனி எடுத்தேன்,
கையில் வைத்து அழைத்தேன்.
மிச்சம் மீதி இல்லாமல்,
மெல்ல சுவைக்கக் கொடுத்தேன்.

பயந்து பயந்து நெளிந்தது,
பரக்க பரக்கத் தின்றது.
வயிறு நிறைந்த பின்னாலே,
வணக்கம் போட்டுச் சென்றது.

– நா. பிந்து,
நெகமம்.

GOKULAM

The monthly magazine for children

A SUMMER VACATION

EXAM FEVER!

FACT OR FICTION?



THE GOLD CHAIN

THE STRAY CUB

EXPERIENCE

VIEWPOINT

PUZZLES

APRIL 1999

Rs. 6/-

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai -600 097

அழ. வள்ளியப்பா நினைவுச்
சிறுகதைப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெறும்
மூன்றாவது கதை

வி. ரோஜா



துப்பறியும் போது...

இரவு மணி 8:15. அருண் தன் நண்பன் ரவியைச் சந்தித்து விட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அருண் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன். புத்திசாலி. எதையும் ஆராய்ந்து செய்யும் திறமைசாலி. அருண் சென்று கொண்டிருந்த தெரு மிகவும் அமைதியாக இருந்தது. திடீரென்று அவனை நோக்கி ஒரு திடகாத்திரமான உருவம் ஓடி வந்தது. அருண் அந்த உருவத்தைக் கூர்ந்து பார்த்தான். அருணை நோக்கி ஓடி வந்தவருக்கு சுமார் நாற்பது வயதிருக்கும். பலசாலியான தோற்றம். பனியனும் லுங்கியும் அணிந்திருந்தார். இடது கால் மூட்டுக்குக் கீழே ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. பரட்டைத் தலையும் கடா மீசையுமாக காட்சி அளித்த உருவத்தைப் பார்த்ததும் அருண் சற்று மிரண்டு போனான்.


அந்த ஆள் அருணிடம் வந்து நின்றார். "தம்பி பயப்படாதே! நான் உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன். நான் வரும் வழியில் ஒரு நாய் என்னைத் துரத்திக் கிட்டு வந்திச்சு. ஓடி வரும் வழியில் கீழே விழுந்து அடிபட்டுருச்சு. என்னைத் தயவுசெய்து வீட்டுல கொண்டு போய் விட்டுருப்பா. நீ நல்லாயிருப்பே'' என்று கெஞ்சினார். அருண் அப்போதுதான் கவனித்தான். அந்த ஆளுக்கு மேல் தாடையில் இரண்டு பற்கள் இல்லாமல் இருந்தது. பார்க்கப் பாவமாக இருந்ததால் சரி என ஒப்புக் கொண்டு அவரை ஏற்றிக் கொண்டு அவர் கூறிய திசையில் சைக்கிளை ஓட்டினான். அவரின் வீடு நகரை விட்டு சற்று ஒதுக்குப்புறமாகவே இருந்தது. ஆள் நடமாட்டமில்லாத இடம். அவர் இறங்கிக் கொண்டார். அருணுக்கு நன்றி கூட சொல்லாமல் அவசரமாக வீட்டிற்குள் சென்று கதவை மூடினார். அவரின் இச் செயல் அருணுக்கு என்னவோ போலிருந்தது. பிறகு தன் வீட்டை நோக்கிக் கிளம்பினான் அருண்.

மறுநாள் காலை. அருண் வழக்கம் போல் செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு படம் அவனைக் கவர்ந்தது. அருண் அந்தப் படத்தை நன்றாகப் பார்த்தான். படத்தில் இருப்பவனை எங்கோ பார்த்திருப்பது போல் தோன்றியது. ஆனால் எங்கு,

எப்போது என்று தெரியவில்லை. திரும் பவும் நன்றாக யோசித்துப் பார்த்தான். அருணுக்கு இப்போது நினைவு வந்தது. அது வேறு யாரும் இல்லை. நேற்று இரவு சந்தித்த மனிதரேதான். பரபரப்புடன் அருண் கீழே கொடுக்கப்பட்டிருந்த செய்தியை முழுவதுமாகப் படித்தான். அவன் கையிலிருந்த செய்தித்தாள் நழுவி கீழே விழுந்தது. யாரோ ஒருவர் அவன் தலையில் பெரிய சுத்தியலால் ஓங்கி அடித்தாற்போல் உணர்ந்தான். மீண்டும் ஒருமுறை படித்தான். அதில் கீழ் கண்ட வாறு எழுதியிருந்தது.

'படத்தில் காணப்படும் முத்துலிங்கம் என்பவன் குழந்தைகளைக் கடத்தி வெளி நாட்டிற்கு விற்கும் ஒரு முக்கிய குற்ற வாளி. முத்துலிங்கத்தை போலீஸ் வலை வீசி தேடுகின்றனர். இவன் நேற்று போலீ சாரிடம் இருந்து தப்பி ஓடி விட்டான். இவன் மேல் தாடையில் இரண்டு பற்கள் இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது. இக் குற்றவாளியை பொதுமக்கள் யாரேனும் கண்டுபிடித்தால் உடனே காவல் துறை யுடன் தொடர்பு கொள்ளவும்.'

அருணுக்கு இப்போது எல்லாம் தெளிவாகப் புரிந்தது. ஒரு முக்கிய குற்ற வாளியைத் தப்பிக்கச் செய்து விட்




டோமே என்று தன் மேலேயே வெறுப்பாக இருந்தது. 'அவனை விட மாட்டேன். எப்படியாவது கண்டுபிடித்து போலீஸிடம் ஒப்படைப்பேன்' என்று நினைத்தபடி எழுந்தான் அருண்.

அன்று மாலையே தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான் அருண். நேரே முத்துலிங்கத்தை இறக்கி விட்ட வீட்டை நோக்கிச் சென்றான். அந்த இடம் மிகவும் நிசப்தமாக இருந்தது. கேட்டை திறந்து கொண்டு உள்ளே சென்றவனுக்கு ஏமாற்றம் காத்துக் கொண்டிருந்தது. வீட்டுக் கதவில் பெரிய பூட்டு ஒன்று தொங்கியது. மெதுவாக பின் பக்கம் சென்றான். சுற்றும் முற்றும் பார்த்தான். கருங்கல்லின் உதவியுடன் பூட்டை உடைத்தான். அருணுக்கு முதலில் அச்சமாக இருந்தாலும் பிறகு தைரியத்துடன் செயல்பட்டான். ஓசைப்படாமல் மெல்ல வீட்டினுள் சென்றான்.

வீடு மிகவும் அலங்கோலமாக இருந்தது. அருண் வீட்டை ஆராய்ந்தான். மூன்று அறைகளைக் கொண்ட வீடு. மேஜை, பீரோ, கட்டில், துணிமணிகள், பாத்திரம் என மிகவும் அடைசலாக இருந்தது. அருண் பீரோவைப் பார்த்ததும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டான். ஏதாவது ஒரு தடயமாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பீரோவைத் திறந்தவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. சொல்லிக் கொள்ளும்படியாக ஒன்றும் இல்லை. அருண் ஒவ்வொரு மூலை முடுக்





''ஏறிய ஏணியை எட்டி உதைக்கக் கூடாது, ஏன் தெரியுமா?''
''தெரியலையே!''
''அப்புறம் எப்படி கீழே இறங்குவே?''
– சி.பி. செந்தில் குமார்

கையும் விடாமல் தேடினான். ஒன்றும் அகப்படவில்லை. சோர்வுடன் திரும்பியவன் அந்த மேஜைக்கடியில் கிடந்த இரண்டு லாட்டரி சீட்டுகளைப் பார்த்ததும் உற்சாகமடைந்தான். அந்த இரு லாட்டரி சீட்டுகளையும் கையில் எடுத்துப் பார்த்தான். மே 28-ஆம் தேதி குலுக்கலுக்குரிய லாட்டரி டிக்கெட்டுகள் அவை. காலண்டரை பார்த்தான். 30-ஆம் தேதியைக் காட்டியது.

அருணின் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. இன்று தேதி 31 அல்லவா? அப்படியானால் நேற்று இரவே முத்துலிங்கம் வீட்டை விட்டு சென்று விட்டான் என்பது ஊர்ஜிதமாயிற்று. அருண் அந்த இரு லாட்டரி டிக்கெட்டையும் திருப்பிப் பார்த்தான். அதன் மறுபக்கத்தில் 'குமரன் லக்கி சென்டர்' என்று அச்சிடப்பட்டிருந்தது. வந்ததற்கு ஒரு தடயமாவது கிடைத்ததே என்று மகிழ்ச்சியுடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

அருண் தன் சைக்கிளை விரைவாக ஓட்டினான். சுற்றும் முற்றும் உள்ள கடைகளைப் பார்த்தவாறே வந்தான். நினைத்தவாறே 'குமரன் லக்கி சென்டர்' என்ற அறிவிப்பு பலகை அருண் கண்ணில் சிக்கியது. தான் கொண்டு வந்திருந்த இரு லாட்டரி சீட்டுகளையும் கடை முதலாளியிடம் காட்டி விவரம் கூறினான். "சார் இது இரண்டும் உங்க கடையில வாங்கினது. வாங்கினவர் பேரு முத்துலிங்கம். அவருக்கு மேல்தாடையில இரண்டு பல் இருக்காது, தாடி வச்சிருப்பார். அவரை நேத்து பார்த்தீங்களா?"

முதலாளி சற்று நேரம் யோசித்து விட்டு, "ஓ! அவனா, முன்னாடி இரண்டு பல் உடைஞ்சிருக்குமே, கடா மீசை கூட வச்சிருப்பான். அவன் நம்ம கஸ்டமராச்சே. இன்னிக்குப் பேப்பர்ல கூட அவனைப் பத்தி செய்தி வந்திச்சே. இப்பத்தான் தெரியுது சரியான கடத்தல்காரன்னு. அவன் நேத்து ராத்திரி ஒன்பதரை மணிக்கு எதிரே உள்ள ஆட்டோ ஸ்டாண்டுல ஆட்டோவில் ஏறிப் போனதைப் பார்த்தேன். நீ வேணும்னா அந்த ஆட்டோ ஸ்டாண்டுல போய் விசாரிச்சுப் பாரு" என்றார். "ஏன் சார், அவன் தான் கடத்தல்காரன்னு தெரியுமில்ல. பின் ஏன் போலீஸுக்குத் தகவல் சொல்லலை?" என்றான் அருண். அதற்கு கடை முதலாளி, "எனக்கு ஏம்ப்பா இந்த தேவையில்லாத வேலை. நான் இன்னிக்கு போலீஸுக்குத் தகவல் சொன்னா கோர்ட்டு, கேஸ், விசாரணைன்னு அலையணும். எனக்கு இது தேவையா?" என்றார். அருண் அவருக்கு நன்றி கூறி விட்டு ஆட்டோ ஸ்டாண்டை நோக்கி நகர்ந்தான்.

ஆட்டோ ஸ்டாண்டில் போய் விசாரித்தான் அருண். முன் பக்கம் இரண்டு பல் இல்லாதவர், கடா மீசையுடையவர் என்றதும் ஆட்டோ டிரைவர் உடனே புரிந்து கொண்டார். "அந்த ஆளை நான்தான் நேத்து நம்ம ஆட்டோவில கொண்டு போய் விட்டேன்" என்று முத்துலிங்கத்தை இறக்கி விட்ட விலாசத்தைக் கூறினார். அருண் ஆட்டோ டிரைவருக்கு நன்றி கூறிவிட்டு அந்த வீட்டை நோக்கிச் சென்றான், தான் பெரிய ஆபத்தில் சிக்கப் போகிறோம் என்பதை உணராமலேயே.

ஆட்டோ டிரைவர் கூறிய இடம் மிகவும் வெறிச்சோடிக் கிடந்தது. தெரு

விளக்குகள் தன் கடமையை மறந்து தூங்கிக் கொண்டிருந்தன. அருண் அவ் வீட்டின் முன் நின்று ஒருமுறை நோட்ட மிட்டான். உள்ளே ஒரு ட்யூப் லைட் எரிந்து கொண்டிருந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்றான். முன் அறையில் யாரும் இல்லை. வீட்டின் உள்பகுதிக்குச் சென்றான். யாரையும் காணோம். தான் தப்பான விலாசத்துக்கு வந்து விட் டோமோ என்று அருண் எண்ணிய போது யாரோ கதவுக்குத் தாழ்ப்பாள் போடும் சத்தம் கேட்டு திடுக்கிட்டான். சுதாரித்துக் கொண்டு திரும்புவதற்குள் அந்த இரண்டு உருவங்களும் அருணின் பின்னால் வந்து நின்றன. அருண் அந்த இரண்டு உருவங்களையும் திரும்பிப் பார்த்ததும் அதிர்ச்சிக்குள்ளானான்.

இரண்டு பேரில் ஒருவன் முத்துலிங்கம். மற்றொருவன் அருணிடம் விலாசம் கூறிய அந்த ஆட்டோக்காரன். முதலில் முத்துலிங்கம் பேசினான். "தம்பி படிக்கிற வயசில இந்த மாதிரி சி.ஐ.டி. வேலை யெல்லாம் பண்ணக் கூடாதுப்பா. இது மாதிரி எவனாவது வருவான்னு தெரிஞ்சு தான் என்னோட கூட்டாளியை அப்படி சொல்லச் சொன்னேன். நான் நினைச்ச மாதிரியே என் வலையிலே நீ விழுந் துட்டே கண்ணா. இனி நீ எங்களிடம் இருந்து தப்பிக்கவே முடியாது'' என்று கடாமீசையை முறுக்கியவாறு சிரித்தான் முத்துலிங்கம். உடனே ஆட்டோக்காரன், ''சரி முத்துலிங்கம் இவனை என்ன பண்ணலாம்? நாம இருக்குற இடம் இந்தப் பொடிப் பயலுக்குத் தெரிஞ்சு போச்சு. இவனை இனி சும்மா விடவும் முடியாது. அதனால நான் இவன் கதையை முடிக்கிறேன்'' என்று சிரித்தான்.

அப்போது ஓட்டின் மேல் யாரோ நடப்பது போல் சத்தம் கேட்டது.

"யாருடா? நம்ம வீட்டு மேலே நடக் கிறது?'' என்றான் முத்துலிங்கம்.

"நான் தனியா வந்து மாட்டிப்பேனா! போலீஸுக்குத் தகவல் கொடுத்துட்டு தான் வந்திருக்கேன்'' என்றான் அருண்.

"பொடிப் பயலே! உன்னை என்ன செய்யறேன் பார்'' என்று கத்தினான் முத்துலிங்கம்.

போலீஸ்காரர் ஒருவர் ஓட்டைப் பிரித்து வீட்டினுள் குதித்தார். "வீட்டைச் சுற்றி போலீஸ் நிக்குது. உன்னால ஒண் ணும் செய்ய முடியாது நட'' என்றார்.

அனைவரும் காவல் நிலையம் சென்றனர். போலீஸ் உயர் அதிகாரி, "அருண், உன் துணிச்சலுக்கு என் பாராட் டுகள். உன் வருங்காலத்தை தேச சேவைக்கே பயன்படுத்து'' என்று வாழ்த் தினார்.

அருணுக்கு முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

ஓவியப் போட்டி


ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு தலைப்பு அறிவிக்கப்படும். அந்தத் தலைப்பிற்கு ஏற்ற ஓவியங்களை நீங்கள் வண்ணம் தீட்டி அனுப்பி வைக்க வேண்டும். சிறந்த ஓவியங் களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் ஆறுதல் பரிசுகள் இரண்டும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள். கடைசி தேதி 20.4.99 இந்த மாதத் தலைப்பு

அதிகாலை நேரம்



பிருந்தாவனம்

பாரசூட்



விமானம் கண்டுபிடிப்பதற்கு முன்பே பாரசூட் கண்டுபிடிக்கப்பட்டது. லூயிஸ் லெனார்மெண்ட் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி தீப்பிடித்த கட்டிடங்களில் இருந்து மனிதர்கள் பத்திரமாகத் தரையில் குதித்து உயிரைக் காத்துக் கொள்ள பாரசூட்டைக் கண்டுபிடித்தார். பாரசூட் உருவாகி 100 ஆண்டுகளுக்கு பின்தான் விமானமே கண்டுபிடிக்கப்பட்டது.

— எஸ். லாவண்யா,
சீர்காழி.



நம் ஒவ்வொருவருடைய உடம்பில் இருக்கும் கார்பனை எடுத்தால் சுமார் 9000 பென்சில்கள் செய்யலாம்.




உலகிலேயே ஸ்விடனில் உள்ள மக்கள் தாம் அதிகமாக காப்பி அருந்துகிறார்கள்.

ஆதாரம் : பொது அறிவுக் குவியல்
பி. தியாகராஜன்,
நாமக்கல்.

பழமையான பாலம்

உலகிலேயே மிகப் பழமையான பாலம் பாபிலோனில் உருவானது. கி.மு. 2230-ல் யூப்ரடிஸ் நதியின் மேல் பாறைகளுக்கிடையே கட்டப்பட்ட மரப்பாலம் தான் உலகின் மிகத் தொன்மையான பாலமாகும்.

ஆதாரம் : பொது அறிவுப் புதையல்
ஜெ. இராமன், சென்னை 74.




தெரியுமா?

உராங் உடாங் என்ற குரங்குகள் மரங்களின் உச்சியில்தான் தூங்கும். ஐம்பது, அறுபது அடி உயரத்தில் கவைப் போன்ற ஒரு கிளையைத் தேர்ந்தெடுத்து அங்கு கிளைகளாலும் இலைகளாலும் பரண் அமைத்து உராங் உடாங் படுத்துக் கொள்ளும். ஒரே இடத்தில் அது பல இரவுகளைக் கழிக்கும். ஆனால் தனது படுக்கையிலுள்ள இலைகள் காய்ந்து சருகாகி உடம்பை உறுத்த ஆரம்பித்தால் உடனே அது வேறு ஒரு புதிய இடத்தில் போய், புதிதாக ஒரு படுக்கையைத் தயார் செய்து கொள்ளும்.

— எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி.





புலி

பூனைப் பிரிவில் மிகப் பெரிய மிருகம் புலிதான். மிக வேகமாக ஓடக் கூடிய புலி ஒரே பாய்ச்சலில் 30 அடி தூரத்தைக் கடந்து விடக்கூடியது. இது இரவில்தான் வேட்டையாடும். மான், காட்டெருமை, காட்டுப் பன்றி ஆகியவற்றை விரும்பி உண்ணும். ஒரே இரவில் 23 கிலோ மாமிசத்தைச் சாப்பிடும். தனது உடலில் ஏற்படும் காயங்களை நாக்கால் தடவியே குணமாக்கி விடும். தனது நாக்கால் எந்தப் பகுதியையாவது தொட முடியாவிட்டால், தனது எச்சிலை முன்காலில் துப்பிக் காயம்பட்ட பகுதியில் தடவும். அப்படியும் முடியாவிட்டால் இன்னொரு புலியிடம் தனது காயத்தைக் காண்பித்து நாக்கால் நக்கிவிடச் சொல்லும்.

உலகில் பல பாகங்களிலும் தோல், பல், போன்றவற்றிற்காக புலிகள் வேட்டையாடப்படுகின்றன.

இப்போது ஆசியாக் கண்டத்தில் மட்டும்தான் புலிகள் அதிகமாக உள்ளன. புலிகளின் எண்ணிக்கை வெகு வேகமாகக் குறைந்து வருகிறது.

பச்சோந்தியின் நாக்கு எவ்வளவு நீளம்?

மிகப் பெரிய உப்பு ஏரி!

ஆசியாவிலேயே மிகப் பெரிய உப்பு ஏரி தெற்கு புவனேஸ்வரிலுள்ள 'கில்கா ஏரி'. இது சுமார் 916 சதுர கி.மீ. தூரம் பரவியுள்ளது. ஏரியில் பல அழகிய தீவுகள் உள்ளன. இத்தீவுகளில் ஒன்றான நலபானா தீவு பறவைகள் சரணாலயமாக உள்ளது.

– எ. கோவிந்தன், சேலம்.




நெய்ய முடியாத நூல்!

சிலந்திப் பூச்சி தனது ஆயுள் காலத்தில் 4,000 கெஜ நீளமுள்ள நூலைப் பின்னி விடுகிறது. சிலந்தி வலையிலிருந்து ஏன் துணி




தயாரிக்கக் கூடாது? பான் என்ற பிரெஞ்சுக்காரர் 1910ஆம் ஆண்டிலேயே இந்த முயற்சியில் இறங்கினார். ஆனால்



தோல்வி கண்டார். சிலந்தி பின்னும் நூல் துணி நெய்ய முடியாத அளவிற்கு மிக மெல்லியது. ஒரு பவுண்டு சிலந்தி நூல் தயாரிக்க வேண்டுமானால் 6,000 சிலந்திப் பூச்சிகளின் உழைப்பு வேண்டும்.

– எம். சகிலா பானு, லெட்சுமாங்குடி.

நாக்கு ரொம்பவே நீளம்




அதிகம் பேசுபவரை நாக்கு நீளம் என்பர். ஆனாலும் மனிதனின் உடல் நீளத்தை விட நாக்கு மிகச் சிறியதே.

ஆனால் பச்சோந்தியின் நாக்கு அதன் உடம்பை விட நீளமானது. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? பச்சோந்தியின் உடல் நீளம் சுமார் 45 செ.மீ., நாவின் நீளம் சுமார் 2 மீட்டர். இந்த நீள நாக்கானது சுருட்டப்பட்டு வாயினுள் இருக்கிறது. தூரத்தில் இருந்தே பூச்சிகளைப் பிடிக்க, சுருட்டிய நாக்கை வெளியே நீட்டும். சூழலுக்கு ஏற்ப உடலின் நிறத்தை மாற்றிக் கொள்ளும் இயற்கை சக்தியும் இதற்கு உண்டு.

எவ்வளவு காலம்?

மனிதன் சாப்பிட்ட உணவு ஜீரணமாக சுமார் 4 மணி நேரம் ஆகும். மலைப் பாம்பு, முயல், குரங்குக் குட்டி போன்ற ஒரு விலங்கை விழுங்கினால் ஜீரணமாக கிட்டத்தட்ட மூன்று வார காலமாகலாம் எனப்படுகிறது. தினமும் உணவு தேட வேண்டிய அவசியமில்லை!

– பிரேமா, சென்னை.



மீனின் வினோதப் பழக்கம்

ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் மட்டுமே 'லங்பிஷ்' என்ற மீனினம் காணப்படுகிறது. இவை கோடை காலம் பூராவும் துயில் கொள்ளும் ஒரு அபூர்வ வழக்கத்தை மேற்கொள்கின்றன.

வேனிற் காலத்தில் இவை வாழ்கின்ற நீர் நிலைகளில் நீர் வற்றியதும், அடிவாரத்திலுள்ள சேற்றில் படுக்கை அறை அமைத்துக் கொண்டு அதனுள் துயில் கொள்ள ஆரம்பிக்கும். காய்ந்து போன இச் சேற்றைத் தோண்டி எடுக்கும்போது மண்ணோடு இம் மீனும் ஒட்டிக் கொண்டிருப்பது தெரியவரும். இந்த மண்ணை திரும்பவும் நீரில் போட்டால் மீன் விழிப்புற்று செயல்படத் தொடங்கி விடுகிறது.

– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.





விளக்கு நடனம்!

சந்திரகிரி காட்டில் எல்லாப் பிராணிகளும் சிங்க ராஜா தலைமையில் கூடியிருந்தன.

"அடுத்த வாரம் நடைபெறும் வன விழாவில் கலை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். யார், யார் என்ன செய்யப் போறீங்கன்னு சொன்னால் வசதியாக இருக்கும்" என்றார் சிங்க ராஜா.

உடனே மயிலினத் தலைவர் "சொக்க வைக்கும் நடனத்தை நாங்கள் வழங்கத் தயார்" என்றார்.

கரடிகளும், நரிகளும் நாடகம் போடுவதாகக் கூறின.

குயில்கள் பாடுவதாகவும் ஆமைகள் மெழுகுவர்த்தி நடனம் ஆடுவதாகக் கூறவும் முயலார் எழுந்தார்.

"அரசே! நாங்களும் விளக்கு நடனம் ஆடப் போகிறோம்" என்றார்.

"முயலாரே! நீங்கள் விளக்கு நடனம் ஆட வேண்டாம். வேறு ஏதாவது செய்யுங்கள்" என்றார் புலியார்.

"இந்த ஆமைகள் விளக்கு நடனம் ஆடும் போது நாங்கள் ஆடினால் என்ன?"

"புரியாமல் பேசாதீர். மெழுகு உருகினால் உமது நிலை என்னாகும்?" என்றார் கரடியார்.

"அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்றார் முயலார் பிடிவாதத்துடன்.

"அனைவரும் அடுத்த வாரம் இதே இடத்தில் மாலை ஆறு மணிக்குத் தயாராக வந்து விடுங்கள்" என்று கூறி கூட்டத்தை முடித்தார் சிங்கராஜா.

எல்லாப் பிராணிகளும் மகிழ்ச்சியுடன் சுறுசுறுப்பாக வேலை செய்தன.

விழா அன்று மாலை நான்கு மணிக்கே கூட்டம் வர ஆரம்பித்தது.

சரியாக மாலை ஆறு மணிக்கு விழா தொடங்கியது. மயில்களின் நடனமும் குயில்களின் பாடலும் அனைவரையும் மயக்கியது.

அடுத்து கரடிகளும் நரிகளும் அற்புதமான நாடகத்தை வழங்கினார்கள்.

இறுதியில் ஆமை, முயல்களின் விளக்கு நடனம் துவங்கியது. நேரம் ஆக, ஆக முயல்களுக்கு மெழுகுவர்த்தியின் சூட்டைத் தாங்க முடியவில்லை. பாதியிலேயே மேடையை விட்டு இறங்கின. கடைசி வரை நடனமாடி கைத்தட்டல்களைப் பெற்றன ஆமைகள்.

விழா முடிந்தது. இரவு முயல்களுக்கு மருந்து தடவிக் கொண்டே, "இதுக்குத்தான் நமக்கு முடிந்த காரியத்தை மட்டும் செய்யணும்னு சொன்னேன். மடத்தனமா போட்டி போடக் கூடாது" என்று கூறினார் கரடியார்.

முயல்கள் வலியுடன் 'உம்' கொட்டின.

— பிரேமா ராவ், பெங்களூர்.

பொருத்தமான சம்பந்தி!

கண்ணாயிரம் மகாக்கருமி. அவனுக்கு ஒரே மகள். மகளுக்குத் திருமணம் முடிக்க வேண்டும் என்ற மனைவியின் நச்சரிப்புத் தாங்காமல் ஒருநாள்,

"இதோ பாரு... நானே போயி நல்ல சம்பந்தமா தேடிப் பிடிச்சுக் கொண்டு வரேன். கொஞ்சம் அரிசி கொடு. நானே சமைச்சுக்கறேன்" என்றான்.

அவன் மனைவி கொணர்ந்த அரிசியைப் பார்த்து அவனுக்கு 'பக்'கென்றாகி விட்டது!

"அம்மாடியோவ்! இவ்வளவு அரிசியா சாப்பிடுவாங்க!" என்று சொல்லி ஒரு பெரிய தூக்கில் கால்படி அரிசி எடுத்துக் கொண்டான்.

எப்படியோ தொலையட்டும் என்று பேசாதிருந்தான் கண்ணாயிரத்தின் மனைவி.

வாகனம் எதிலும் ஏறினால் காசு கொடுக்க வேண்டுமே! அதனால் நடந்தே போனான் கண்ணாயிரம்.

மறுநாள் ஒரு அழகான சுனை. நீரை அள்ளி அள்ளிக் குடித்தான். கரையிலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்தவன், "கட்டு சாத மூட்டையை இங்கேயே சாப்பிடு. அடுத்தாற்போலே ஐந்து மைல் தூரத்துக்குக் குளமோ, ஏரியோ கிடையாது" என்றான்.

அவனை ஏற இறங்கப் பார்த்த கண்ணாயிரம் "என்கிட்டே அரிசிதான் இருக்கு; சாதம் இல்லே! சோறு வடிக்கிறதுக்கு விறகு, தீப்பெட்டி எதுவுமே கிடையாது" என்றான் ஏக்கமாக.

"அப்படியா! என்கிட்டே சாத உருண்டை இருக்கு. பொங்கல் சாதம். உனக்கு சம்மதமானா நாம இரண்டு பேரும் மாற்றிக்கலாம். என்கிட்டே தீப்பெட்டி இருக்கு. பசியும் ரொம்ப இல்லே. மூணு கல் வைச்சு, சுள்ளி பொறுக்கி சமைச்சு சாப்பிட்டுக்கறேன். உப்பும், ஊறுகாயும் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் புது ஆள்.

கண்ணாயிரத்துக்குப் பரம சந்தோஷம். மாற்றிக் கொண்டதும் வேகமாக நடந்தான். புது ஆளும் போகட்டும் என்று பேசாதிருந்தான். 'இருட்டுவதற்குள் அடுத்த ஊருக்குப் போய் விடுகிறேன்' என்று சமாதானமாகப் பேசிக் கொண்டே நடந்தான் கண்ணாயிரம்.

வெகு தூரம் வந்த பிறகு ஒரு மரத்தடியில் சோற்று மூட்டையைப் பிரித்தான். பெரிய உருண்டை சாதத்தைப் பார்த்ததும் சந்தோஷப்பட்டான். மூன்று வேளைக்கும் போதும் என்று நினைத்தான்.

சாப்பிட்டுப் பார்த்தான். ருசியாகவே இருந்தது. 'அந்த ஆள் முட்டாள்' என்று நினைத்தபடி இன்னும் கொஞ்சம் பெயர்த்தான். கல் கையில் குத்தியது. பரபரப்புடன் சோற்றை வழித்தால்; உள்ளே இருந்தது களிமண் உருண்டை. ஏமாந்து போனதை நினைத்து ஆத்திரப்பட்ட கண்ணாயிரம் 'விடுவிடு'வென வந்த வழியே நடந்தான்.

புது ஆள் அந்தச் சுனை அருகேதான் இருந்தான். கண்ணாயிரம் அவன் முன் போய், "களிமண்ணிலே சோற்றைப் பூசி ஏமாற்றி இருக்கிறாயே! இது நியாயமா?"


மாலதி

என்று கேட்டான்.

"நீ மட்டும் என்ன யோக்கியம்? மேலே யிருந்தது அரிசி; கீழே இருந்தது மணல். நான் பார்க்காமல் வேகவைத்து விட்டு சாதத்தை எப்படி பிரிப்பது என்று முழித் துக் கொண்டிருக்கிறேன்! வந்து பிரித்துக் கொடு" என்று பதிலுக்கு எகிறினான் புது ஆள்.

கண்ணாயிரம் வழியிலேயே அரிசி யைத் துண்டிலே கொட்டிக் கொண்டு, அடியில் ஆற்று மணலை நிரப்பி மேலே அரிசியைப் பரப்பி இருந்தான்!

அசடு வழியச் சிரித்தவன், "உன் பெய ரென்ன? என்ன ஜோலியாய் வந்திருக்



கிறாய்!" என்று விசாரித்தான்.

"என் பெயர் சிக்கனம் சின்னச்சாமி; என் பையனுக்குச் சிக்கனமான குடும்பத் தில் பெண் தேடிப் புறப்பட்டேன்" என் றான் சின்னச்சாமி.

கண்ணாயிரத்தின் மகிழ்ச்சி சொல்லி முடியாது! "சரி; வாருங்கள். வீட்டிற்குப் போய் என் பெண்ணைப் பார்க்கலாம்" என்று அழைத்து வந்தான்.

வீட்டிற்கு வரும்போது இருட்டி விட் டது. மின்சார விளக்குகள் இல்லாத கிராமம். கூடத்தில் ஒரே ஒரு சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

இருவரும் பேச உட்கார்ந்ததும் விளக்கை ஊதி அணைத்து விட்டான் கண்ணாயிரம்.

"வாயால்தானே பேசப் போகிறோம்! வெட்டியாக மண்ணெண்ணெய் செலவு எதற்கு?" என்றான்.

"பலே! அப்படித்தான் இருக்கணும்" என்று ஆமோதித்தான் சின்னச்சாமி.

பேசி முடித்தபின் மனைவியைக் கூப் பிட்டு, "விளக்கை ஏற்று; பெண்ணைக் கூப்பிடு. தன் மகனுக்குப் பொருத்தமா என்று பார்க்கட்டும்" என்றான் கண்ணா யிரம்.

"இருங்கள்; நான் வேஷ்டியைக் கட்டிக் கொண்டு விடுகிறேன். இருட்டாய்தானே இருக்கிறது. வேஷ்டி எதற்கு என்று சுழற்றி வைத்திருக்கிறேன்" என்று அவசரமாகச் சொன்னான் சிக்கனம் சின்னச்சாமி.

விளக்கு ஏற்றப்பட்டது. கண்ணாயிரத் தின் பெண் வந்து நமஸ்காரம் செய்தாள். சின்னச்சாமி, "என் உறவினர்களிடம் சொல்லி அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யா ணம் வைத்துக் கொள்ளலாம்" என்றான்.

உடனே மணப்பெண், "மாமா! எதுக்கு உறவினர்களை அழைத்து வீண் செலவு. நம்ம வீட்டிலேயே ரெண்டு குடும்பத் தோட கல்யாணத்தை நடத்தி முடிச்சிட லாம்" என்றாள்.

சின்னச்சாமி தமக்கேற்ற மருமகள் என்று ஆனந்தத்தில் மயங்கி விழுந்தார்!



விடுகதைப் பக்கம்

1. பச்சைக் கிளி; பறக்க முடியாத கிளி; கொம்பிலே இருக்கும் கிளி – அது என்ன கிளி?
2. பகலில் சுருள்வான், இரவில் நீள்வான் – அவன் யார்?
3. வெட்ட வெட்ட வெளியே வரும் கரும் புதையல் – அது என்ன?
4. யாரும் போக முடியாத சிறைக்குள் மஞ்சப்பன் மயங்கிக் கிடக்கிறான் – அவன் யார்?

– **ஆர்.வி. மயில்வாகனன், ஒன்பதாம் வகுப்பு, டான் போஸ்கோ பள்ளி, மதுரை.**

விடை : 1. மின்னல், இடி, மழை, 2. பறவைக் கூடு, 3. தபால் தலை, 4. குயில், 5. காளான்.

1. போவான் வருவான் திம்பப்பன், ஒரு காலில் நிற்பான் திம்பப்பன் – அவன் யார்?
2. தண்ணீரில் கிடக்கும் தங்கம், நகை செய்ய முடியாத தங்கம் – அது என்ன?
3. வீட்டுக்குள்ளே வந்த திருடன், பணத்தை எடுக்கலை; நகையை எடுக்கலை; பாலை மட்டும் குடித்துச் சென்றான் – அவன் யார்?

– **சு. எழிலரசி, பத்தாம் வகுப்பு, அரசு மேல் நிலைப்பள்ளி, பெரியதச்சூர்.**

மழைக்குப் பிடிக்க முடியாத குடை எது?

விடை : 1. கதவு, 2. மீன், 3. பூனை.

விடை : 1. மாங்காய், 2. பாய், 3. பென்சில், 4. முட்டை.

1. தங்கை விளக்குக் காட்ட, அண்ணன் மேளம் கொட்ட, அம்மா தண்ணீர் தெளிக்கிறாள் – அது என்ன?
2. கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு, கதவு இல்லாத வீடு – அது என்ன?
3. விதவிதமாக விற்கும் தலை, விரும்பி மக்கள் வாங்கும் தலை, தடவி தடவி அனுப்பும் தலை – அது என்ன தலை?
4. முட்டையிடும் அடைகாக்காது; கூட்டில் குடியிருக்கும், கூடு கட்டாது. – அது எது?
5. மனிதன் செய்யாத குடை, மழைக்குப் பிடிக்க முடியாத குடை – அது என்ன குடை?

– **சிவபெருமான், ஐந்தாம் வகுப்பு, சின்மயா வித்யாலயா, மணக்காடு, கேரளா.**

1. கண், வாய் இல்லாவிட்டாலும் சரியாக நீதி சொல்வான் – அவன் யார்?
2. ஐந்து கிளைகள் உள்ள மரம்; நிற்க நிழலுமில்லை; பறிக்க இலையுமில்லை – அது என்ன?
3. எதைச் சுட்டாலும் மடியும், இதைச் சுட்டாலோ மடியாது – அது என்ன?
4. கிளை இல்லா மரத்திலே நூறு தேனீ குடியிருக்கு – அது என்ன?

– **ப. காளிதாசன், நீர்விளங்குளம், புதுக்கோட்டை மாவட்டம்.**

விடை : 1. தராசு, 2. கை, 3. தோசை, 4. தலை, பேன்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 வ	ளை	ய	ல்		ம்	ச	ச்	2 அ
ல்			ய		ய			ன்
லா			3 மு		4 லா			ன
ரை	வ	5 அ		6 பெ		7 ப	ல	ம்
			8 மு	ட்	டை			
தை	ந்	9 ம		டி		10 லா	ப	ம்
க			11 சி		12 ப			க
டு			ன		யி			ட
13 வி	ர	ய	ம்		ர்	த	ர	14 நா



கோகுலம் க்விஸ் முடிவு

1. உலகிலேயே மிகப் பெரிய பாம்பு **அனகோண்டா**
2. பைபிளில் அதிகம் இடம்பெற்றுள்ள நதி **ஜோர்டான்**
3. சமீபத்தில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் **அமர்த்யாசென்**
4. டீசல் எஞ்சினைக் கண்டுபிடித்தவர் **ருடால்ஃப் டீசல்**
5. பைசா நகர சாய்ந்த கோபுரம் **இத்தாலி** நாட்டில் உள்ளது.
6. சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள்கள் **புதன், வெள்ளி.**
7. புகழ்பெற்ற ஸ்பிங்ஸ் சிலை **எகிப்தில்** உள்ளது.
8. **கிரேக்க** நாட்டில் மிக நீளமான தேசிய கீதம் பாடப்படுகிறது.
9. எலுமிச்சையில் வைட்டமின் **சி** உள்ளது.
10. கிரிக்கெட் போட்டியில் **இலங்கை** சென்ற உலகக் கோப்பையை வென்றது.

ஏராளமானோர் கலந்து கொண்டாலும் பத்து பேரே அனைத்து சரியான விடைகளையும் அளித்துள்ளனர்.


ரூபாய் இருபது பரிசு பெறுவோர் :

1. என். ராஜேஷ், குழிவிளை, குமரி மாவட்டம்.
2. டி. கோபாலகிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஈங்கூர்.
3. பி. ரவிச்சந்திரன், ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பென்னாகரம்.
4. என். ஜனனி, ஏழாம் வகுப்பு, தஞ்சாவூர்.
5. பி. ஜீவா, நாகமலை புதுக்கோட்டை, மதுரை.
6. கோ. காமினி, சென்னை.
7. வி. ஜெயந்தி, கொல்லம், கேரளா.
8. கே. சோபன் பாபு, எட்டாம் வகுப்பு, புதுக்கோட்டை.
9. ப. சிவக்குமார், தஞ்சாவூர்.
10. ஆர். கிருத்திகா, ராணிப்பேட்டை

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.




பாட்டி ஊரில் ஆறு ஓடுகிறது!



பரிசோதனை!

எங்கள் பள்ளியில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் தனித்தனியே மருத்துவர்கள் இருந்தார்கள். என் தோழி ஆறுமுகத்தைத் தவிர அனைவருக்கும் பரிசோதனை முடிந்தது. அவள் காத்திருந்தாள். ஆனால் அழைக்கப்படவேயில்லை. அங்கு வந்த எங்கள் ஆசிரியரிடம் விஷயத்தைக் கூறினோம். பெயர் பட்டியலை வாங்கிப் பார்த்துவிட்டு, ''உன் பெயரை தவறுதலாக மாணவர்கள்

ஆறுகள்!




புவியியல் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். சுவரில் ஆப்பிரிக்க வரை படத்தை மாட்டி ஆறுகள் எங்கெல்லாம் ஓடுகிறது என்பதைக் காட்டினார். கடைசி வரிசையில் ஒரு மாவணன் தூங்கிக் கொண்டிருந்தான். ஆசிரியர் கோபத்துடன் அவனை எழுப்பி, ''ஆறு எங்கெல்லாம் ஓடுது?'' என்றார். அவன் முழித்தான். பிறகு, ''சார்! எங்க பாட்டி ஊர்ல ஓடுது'' என்றான். நாங்கள் சிரித்தோம். ஆசிரியர், ''பாட்டி ஊர்ல, தாத்தா ஊரிலே ஓடும் ஆறுகளைப் பற்றி நான் கேட்கலை. ஆப்பிரிக்காவில் ஓடும் ஆறுகளை இந்த வரைபடத்துல வந்து காட்டு'' என்றார். அவன் பரிதாபமாக விழித்தான்.

– க. நீலாவதி, ஐந்தாம் வகுப்பு,
ஊ.ஒ.து. பள்ளி, கூத்தனூர்.

உள்நாட்டுக் கடிதம்


எங்கள் வகுப்பில் பொது அறிவிற்கென வாரம் ஒரு மணி நேரம் ஒதுக்குவார் ஆசிரியர். அதே போல் ஒரு நாள் ''தபால் நிலையத்தில் என்னென்ன கிடைக்கும்?'' என்று ஒரு மாணவனிடம் கேட்டார் ஆசிரியர். அவன் எழுந்து, ''ஸ்டாம்பு, மணியார்டர், இங்கிலாந்து லெட்டர், அயல் நாட்டுக் கடிதம்'' என்று கூறி முடித்தான். உடனே அருகில் இருந்த இன்னொரு மாணவன், ''இங்கிலாந்தும் அயல்நாடுதானே சார்! அதுக்கு மட்டும் ஏன் தனியான லெட்டர்?'' என்றான். ஆசிரியர் சிரித்து விட்டு, ''அவன் இன்லேண்ட் அதாவது உள்நாட்டுக் கடிதத்தை தான் அப்படி சொல்றான்'' என்று விளக்கம் அளித்தார்.

– தி.க. பாலசுப்ரமணியன்,
திருவண்ணாதபுரம், நெல்லை மாவட்டம்.



பட்டியலில் சேர்த்து விட்டார்கள்'' என்றார் ஆசிரியர். பிறகு மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். மருத்துவர் பரிசோதிக்கும் போது ''சார் எனக்குக் கண்ணில் தண்ணியா வருது'' என்றான் ஆறுமுகம். ''உனக்கு ஆறுமுகமாச்சேம்மா! எந்த முகத்தில் உள்ள கண்ணுன்னு சொன்னால் பரிசோதிக்க வசதியா இருக்கும்'' என்றார் மருத்துவர். வெளியில் வந்த ஆறுமுகம் என்னிடம் ''எங்க பாட்டி எனக்கு ஆறுமுகம்ன்னு ஏன் பேர் வெச்சாங்கன்னு வருத்தப் படறேன்'' என்றான். நான் சமாதானம் செய்தேன்.

– எஸ். கவிதா,
ஆறாம் வகுப்பு,
நெல்லை.



டெஸ்ட்!

நாங்கள் கிரிக்கெட் பற்றி வகுப்பில் பேசிக் கொண்டிருந்தோம். ஆசிரியர் திடீரென வகுப்பிற்குள் நுழைந்தார். ''எல்லோரும் தனித் தனியா உட்கார்ந்து படிங்க. அடுத்த வாரம் டெஸ்ட் ஆரம்பிக்கப் போகுது'' என்றார் ஆசிரியர். உடனே என் நண்பன், ''ஒன்டே எப்போ சார்?'' என்றானே பார்க்கலாம்! நாங்கள் சட்டென சிரித்துவிட்டோம். ஆசிரியர் நண்பனின் காதைத் திருகியபடி, ''எப்போதும் கிரிக்கெட் ஞாபகமாவே இரு'' என்றார் கோபத்துடன்.

– மு. கந்தவேல், தாரமங்கலம்.

திறந்து பாருங்கள்!



அரையாண்டு பரீட்சை முடிந்தது. வகுப்பாசிரியர் வந்தார். ''பதினைந்து நாள் விடுமுறை. நல்லா ஆட்டம் போட்டுட்டு பள்ளி திறக்கும் போது போய் புத்தகங்களை எடுக்காதீங்க. அடிக்கடி புத்தகங்களைத் திறந்து பாருங்க. இல்லைன்னா தேள், பூரான் ஏதாவது இருந்து கைல கொட்டிடப் போகுது'' என்றார் ஆசிரியர் நகைச்சுவையாக. நாங்களோ சிரிக்க ஆரம்பித்தோம்.

– என். சீனிவாசன், வரிக்கல், விழுப்புரம்.

வணக்கம் சொல்!

முதல் வகுப்பு படிக்கும் என் தங்கையை பள்ளியில் விடச் சென்றேன். எதிரில் அவள் வகுப்பு ஆசிரியை வந்தார். உடனே என் தங்கை நெற்றியில் கை வைத்து வணக்கம் தெரிவித்தாள். ''ஏன் வாயைத் திறந்து சொல்லமாட்டியா? சைகையிலே சொல்லறே'' என்றார் ஆசிரியை. உடனே என் தங்கை வாயை 'ஆ' என திறந்தபடி சல்யூட் அடித்தாள். இதைப் பார்த்த எனக்கும் அவள் ஆசிரியைக்கும் சிரிப்பு வந்தது. ''கம்மா வாயைத் திறக்கச் சொல்லலை. வணக்கம் மிச்சர்ன்னு சொல்லச் சொன்னேன்'' என்றார் ஆசிரியை. தங்கை மீண்டும் வணக்கம் சொல்லிவிட்டு வகுப்பிற்குள் சென்றாள்.

– வெ.அ. கார்த்திகேயன்,
பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு,
வெள்ளோடு.



உங்கள் நூலகம்



பாரதத்திற்குப் பெருமை சேர்க்கும் பெண்மணிகள், நிகரியவாதி, பக். 88, ரூ. 17/- குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், பிளாக் ஏஏ96, அண்ணா நகர், சென்னை - 40.

அரசியல், கலை, இலக்கியம், போன்று பல்துறைகளில் சிறப்புற்று விளங்கிய 21 இந்தியப் பெண்மணிகளின் பெருமை மிக்க வரலாற்றுக் குறிப்புகள் இதில் தரப் பட்டுள்ளன.

அணுசக்தி என்றால் என்ன? இரா ஜேந்திர சோழன், பக். 128, ரூ. 30/- வையவி பதிப்பகம், 700 எம்.ஐ.ஜி., த.வீ.வ. வாரியக்குடியிருப்பு, வேளச்சேரி, சென்னை - 42.

உலகையே ஆட்டிப் படைக்கும் அணு சக்தியின் தோற்றம், மேம்பாடு, வளர்ச்சி வேகம், ஆகிரமித்துள்ள துறைகள் என்று எல்லாத் தகவல்களும் அடங்கிய விரிவான நூல்.

சிறுவர் கதை விருந்து, செல்லமுத்து, பக். 144, ரூ. 30/- ஸ்ரீ செல்வ நிலையம், 107/1, கௌடிய மடம் சாலை, த.பெ. எண். 5571, இராயப்பேட்டை, சென்னை - 14.

பல்நெறிகளை எளிதாக வலியுறுத்தும் 29 சிறுகதைகளின் தொகுப்பு. படங்களும் மெருகூட்டுகின்றன.

பொன்விழா க்விஸ், அப்பாஸ் மந்திரி, பக். 248, ரூ. 47/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

இந்திய சுதந்தரப் போராட்டம், இந்தியா குறித்த 2000 வினாக்களும், அவைகளுக்கு உரிய பதில்களுடன் இதில் தரப்பட்டுள்ளன. சிறுவர்க்கு மட்டுமல்ல, எல்லா வயதினரும் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்கள் உள்ளன. வினாடி வினா நடத்துபவர்களுக்கும், பள்ளிகளுக்கும் நன்கு பயன் படும்.

மழலை நிலா, அரிமதி தென்னகன், பக். 32, ரூ. 13/- முத்துப் பதிப்பகம், 7, வில்லியம் லேஅவுட், 2வது தெரு, கன்னியாகுளம் சாலை, விழுப்புரம் - 605 602.

பல ஆண்டுகளாக சிறுவர் இலக்கியத் திற்குப் பெருமை சேர்த்து வரும் மூத்த படைப்பாளர்களில் ஒருவரான, குழந்தைக் கவிஞர் விருது பெற்ற ஆசிரியரின் 31 சிறுவர் பாடல்களின் வண்ணத் தொகுப்பு. மழலைப் பாடல்கள் அதிகம்

ஆமை முதுகில் நத்தைகள் அன்பாய்ப் பயணம் செய்யட்டும்!

இல்லை என்ற குறையை இது போக்கும். பொருள் அழகா, நடை அழகா என்று திகைக்க வைக்கும் சந்தம். உதாரணம் 'நாள் வரும்' என்ற தலைப்பில் 8 அடிப் பாடல்.

புதுமையாக நாய் மடியில்
பூனை பாலைக் குடிக்கட்டும்!
ஆமை முதுகில் நத்தைகள்
அன்பாய்ப் பயணம் செய்யட்டும்!
புலியின் கூட்டம் காவல் செய்யப்
பொன்மான் எல்லாம் உழலட்டும்!
எலியின் உணவைப் பூனைகளே
எடுத்துப் பரிவாய் ஊட்டட்டும்!

– ரே




ஜொலிக்கும் கறுப்பு முத்து!

முத்துப் போல் பளபளக்கும் பற்கள் என்று அழகான பற்களைக் கூறுவோம். கறுப்பு முத்துகளும் கூட உலகில் விளைவிக்கப்படுகின்றன என்பதை அறிந்தால், இனி முத்துப் பற்கள் என்று சொல்ல யோசிப்போம்! என்ன கறுப்பு முத்தா? ஆம்! உண்மையிலேயே கறுப்பு முத்துகள் உண்டு. இவை உலகின் கடைகோடியான, பசிபிக் சமுத்திரத்திலுள்ள பிரெஞ்சு போலினீசியாவைச் சேர்ந்த ஆர்க்கிபெலாகோ பகுதியில் காணப்படுகின்றன. இங்குள்ள 'டுவாமோட்' என்ற தீவும் கூட, கடலுக்குள் பளப்பளக்கும் முத்துச் சரம்போல் தான் இருக்கிறது. இங்கு, ஏற்கெனவே குமுறி ஓய்ந்து போன எரிமலைகளின் வாய் ஓரங்கள், பவளங்களால் ஆனவை. இவற்றை பவளத்திட்டுகள் என்கிறோம். இவைகளில்தான் கறுப்பு முத்துகள் உருவாக்கப்படுகின்றன.

இந்த முத்துச் சிப்பி, உலகப் புகழ் பெற்ற ஜப்பானிய முத்துச் சிப்பியான 'அகோயா'வை விட நான்கு மடங்கு பெரியது. இம்முத்துகள் பெரிதானவை மட்டுமல்ல; மிக அரிதானவையும் கூட. 'டுவாமோட்' தீவுக்கருகிலுள்ள பவளத்திட்டுகளைத் தவிர, உலகில் வேறெங்கும் கறுப்பு முத்துகள் காணப்படுவதில்லை. 'கறுப்பு முத்து'களைக் கீழே வைத்தால், அவை சாதாரண வெளிச்சத்தில் கூட டாலடிக்கும். ஒளியை அற்புதமாய் பிரதிபலித்து ஜொலிக்கும்! மினு மினுக்கும் கறுப்பு தவிர வெள்ளி போன்ற சாம்பல் நிறத்திலும் காணப்படுகின்றன!

கறுப்பு முத்துகள் மிக அரிதாகக் கிடைப்பதால், உலகச் சந்தையில் இதன் விலை அதிகம். ஒவ்வோர் ஆண்டும் டுவாமோட் பகுதியில் கிட்டத்தட்ட 10,00,000 முத்துகள் விளைவிக்கப்படுகின்றன. ஒரு சிறிய முத்தின் விலையே கிட்டத்தட்ட 6000 ரூபாய். பெரிய முத்துகள் 2-3 செ.மீ குறுக்களவுடன் கோலி குண்டு அளவில் இருக்கும்.

— மோகனா



அஜித் அகார்கர் விளையாடுவாரா?


கல்கத்தா டெஸ்டில் ஒரே இன்னிங்சில் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தினாரே ஸ்ரீநாத்! அது பற்றிய டேட்டாக்களை திரட்டிக்கொண்டிருந்தபோது கண்ணன் வந்தான். "என்ன, ஸ்ரீநாத் சூப்பரா ஆடியும் இந்தியாவுக்கு வெற்றி கிடைக்கலையே" என்று ஆதங்கப் பட்டான்.



• அஜித் அகார்கர்



• பீட் சாம்ப்ராஸ்




• லியாண்டர் பயஸ்

"ஆமாம். இது இந்தியாவுக்கு 'தோல்வி மாதம்' அப்படின்னு ஆகிப் போச்சு. பாகிஸ்தானுக்கு எதிரான ஹாக்கி தொடரைப் பார். அதிலும் 3-6 என்ற கணக்கில் இந்தியாவுக்குத் தோல்வி."

"சரி. ரொம்ப நாளா டென்னிஸ் பற்றி தகவலே சொல்லலியே, லியாண்டர் பயஸ் என்ன செய்யறார்?"

"லியாண்டர் சர்வதேச



• ஸ்ரீநாத்



• சடகோபன் ரமேஷ்

டென்னிஸ் தரப்பட்டியலில் முன்னேறியிருக்கிறார். அதாவது 81-வது இடத்தைப் பிடித்திருக்கிறார். அமெரிக்காவின் பீட்சாம்ப்ராஸ் 3695 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார். ரஷ்யாவின் கபேல் நிகோவ் (3637) இரண்டாவது இடத்தில் இருக்கிறார். ஸ்பெயினின் அலெக்ஸ் கொரட்ஜா (3250) மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்."

"அகாசி என்ன ஆனார்?"

"அவர் 2583 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்தில் இருக்கிறார். ஆஸ்திரேலியாவின் ராப்டர் (3169) ஐந்தாவது இடத்திற்கு வந்து விட்டார்."

"அஜித் அகார்கர் உலகக் கோப்பை கிரிக்கெட்டிலாவது ஆட வருவாரா?"

"நிச்சயமா. அகார்கர் தாம் பூரண குணமடைந்து விட்டதா சான்றிதழ் கொடுத்துட்டார். 19 பேர் கொண்ட உலகக்கோப்பை அணியிலும் அவர் பெயர் இடம் பெற்று விட்டது. 15 பேர் அணியில் இடம் பெறும் வாய்ப்பு பிரகாசமாகவே இருக்கிறது. தமிழ்நாட்டின் ராபின்சிங், சடகோபன் ரமேஷ் ஆகிய பெயர்களும் அணிப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன."

"பார்க்கலாம். இந்த இளைய தளபதிகள் நமக்கு உலகக்கோப்பையை வாங்கித் தராங்களான்னு" என்று ஆதங்கத்துடன் கிளம்பினான் சண்ணன்.

- விளையாட்டுப் பையன்

சிம்காக்ஸ் ஓய்வு பெறுகிறார்!

தென் ஆப்பிரிக்க ஆல் ரவுண்டர் பாட் சிம்காக்ஸ் ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார். இவர் ஒன்பதாவது விக்கெட்டிற்கு உலக சாதனை ரன்களை சேர்த்தது பற்றி நாம் முன் பொருமுறை படித்தோம். நினைவிருக்கிறதா? குறுகிய காலமே அவர் உலக கிரிக்கெட்டில் ஈடுபட்டிருந்தாலும்கூட, அணிக்கு அவரால் கிட்டிய பலன்கள் பல. மே மாதம் நடைபெறவிருக்கும் உலகக் கோப்பை அணியிலும்கூட இவர் இடம் பெற்றிருந்தார். இருப்பினும் தற்போது ஆடி வரும் கிரிக்கெட்டர்களில் அதிக வயதான சிம்காக்ஸ் தம் ஓய்வை அறிவித்து விட்டார்.




''கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன். இனி எனது குடும்பம், மீன் பிடித்தல், தோட்ட வேலை, கோல்ஃப் ஆகியவற்றில் நேரத்தை செலவிடப் போகிறேன்'' என்கிறார் சிம்காக்ஸ்.

தென் ஆப்பிரிக்க அணியின் பயிற்சியாளர் பாப் உல்மர் "இது எங்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது" என்று தெரிவித்துள்ளார். பாட் சிம்காக்ஸின் 'கிரிக்கெட் டேட்டா'வைப் பார்ப்போமா?

சிம்காக்ஸ் டேட்டா

	டெஸ்ட்	ஒரு நாள் ஆட்டம்
ஆடியது	20	80
சேர்த்த ரன்கள்	741	694
சராசரி	28.5	16.92
நூறு	1	—
விக்கெட்டுகள்	37	72
சராசரி	43.32	38.36



பாட்டி கதை சொல்வது போல் இருந்தது!

'மாணவர்கள் நோட்ஸ் படிக்கலாமா?' என்ற கட்டுரை இன்றைய கல்விச்சூழலுக்கு அடி கொடுப்பதாக இருந்தது. ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் கலந்து கொள்ளாதது வருத்தத்தை அளிக்கிறது. இனி அனுப்பலாமா?

– ஜா. இன்டெண்ட் ரம்யா,
திருத்துறைப்பூண்டி.

ஈற்று வாக்கியக் கதைப்போட்டி அறிவிக்கப்பட்டு முடிவும் மார்ச் இதழில் வெளிவந்து விட்டது. எனவே இனி ஈற்றுவாக்கியக் கதையை அனுப்ப வேண்டாம். அதற்காக வருத்தப்படாதீர்கள் ரம்யா. நீங்கள் கதைகளை எழுதி அனுப்பலாம். மற்ற போட்டிகளில் பங்கேற்கலாம்.

(ஆ–ர்)

✉ 'நோட்ஸ் இருக்கு சமாளிக்கலாம்' என்ற அட்டையைப் பார்த்தவுடன் எனக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. புத்தகத்தை பிரித்து கட்டுரையைப் படித்துப் பார்த்தபின்தான் ஆறுதலாக இருந்தது.

– ச. வினோதா, திருத்துறைப்பூண்டி.

✉ 'சூடு கண்ட பூனை' கதை பாட்டியிடம் நேரில் கதை கேட்டதைப் போல் சுவையாக இருந்தது.

– எஸ். சௌமியா, ஐந்தாம் வகுப்பு,
ஜான்சன் ஆங்கிலப் பள்ளி,
தூத்துக்குடி.

✉ என்றோ நான் அனுப்பிய சாதாரண கதையை அழகிய படக்கதையாக்கி என் பிறந்த நாள் பரிசாக அனுப்பி வைத்து விட்டீர்கள். என் நண்பர்கள் பாராட்டினார்கள். என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

– ப. செண்பக முருகன்,
சின்னாளப்பட்டி.

✉ நாங்கள் அனுப்பும் துணுக்குகள், சிரிப்புகளை 25 பைசா தபால் கார்டில் எழுதி அனுப்பலாமா?

– ச. வேங்கடகிருஷ்ணன்,
எட்டாம் வகுப்பு,
ஜெயகோபால் கரோடியா
தேசிய மேல்நிலைப்பள்ளி, சென்னை

25 பைசா தபால் கார்டிலேயே துணுக்குகளை அனுப்பி வைக்கலாம் வேங்கடகிருஷ்ணன். ஆனால் நுணுக்கி எழுதாமல் தெளிவாக எழுத வேண்டும்.

(ஆ–ர்)

✉ சென்ற வாரம் என் நண்பன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு மார்ச் கோகுலம் இருந்தது. கோகுலத்தில் என்னதான் இருக்கிறது என்று புரட்ட ஆரம்பித்தேன். அறிவுப்புதிர், சிந்துபாத் பயணங்கள், குறுக்கெழுத்துப் புதிர், படக்கதைகள்... என ஒவ்வொரு பகுதியும் என்னைக் கவர்ந்தன. இத்தனை நான் படிக்காமல் விட்டு விட்டோமே என்ற வருத்தம் ஏற்பட்டது.

– ஜி.ஆர். ராஜேஷ்
உடுமலைப்பேட்டை


✉ குளவிகளைப் பற்றிய படங்களும், செய்திகளும் நன்றாக இருந்தன. எங்கள் அபிமான கிரிக்கெட் வீரர்களின் புகைப்படங்களை கலரில் வெளியிடலாமே?


– க. ரஞ்சீத்,
க. புனிதா,
வேலூர்.

"என்ன பள்ளிக்கு நேரமாயிருச்சி, இப்பதான் சாப்பிடுறே. இதற்கு என்ன அர்த்தம்?"

"லேட்டுன்னு அர்த்தம்!"

— செ. டேனியல்





"என் நண்பன் கோபி எப்பப் பார்த்தாலும் ஒரே ஜோக்கா சொல்லிக்கிட்டே இருப்பான்."

"ஏன் வேற ஜோக்கே அவனுக்குத் தெரியாதா?"

— கே.ஆர். உதயகுமார்



"இந்த மலரில் பலகாரம் வாசம் வருதே ஏன்?"

"அது 'தீபாவளி' மலர் ஆச்சே!"

— பொறையாறு கங்கா

கடி ஜோக்ஸ்!

"இவ்வளவு பறவைகள் பறந்து போகுதே, எங்கிருந்து வருதுங்க?"

"முட்டையிலே இருந்துதான்!"


— ஆர்.வி. மயில்வாகனன்




"செல்வந்தர் கீழே விழுந்தா எப்படி விழுவார்?"

"சொத்து'ன்னு விழுவார்!"

— அ. பேச்சியப்பன்





லேக்டோஸ் குறைந்த பால்!

பால், சத்து மிகுந்த பானம். இதயம் மற்றும் எலும்புகளுக்கான கால்சியம், வைட்டமின்கள் மற்றும் தாதுப் பொருட்கள் பாலில் உள்ளன. பாலில் உள்ள



சர்க்கரை 'லேக்டோஸ்' என்று அழைக்கப்படுகிறது.


பால் அருந்தும் 70 சதவீதம் பேருக்கு, குறிப்பாக வயதானவர்களுக்கு லேக்டோஸ் ஒத்துக் கொள்வதில்லை. இதனால் வயிற்று உபாதைகள் ஏற்படுகின்றன.

எனவே பசுக்களில் மரபணு மாற்றம் மூலம் லேக்டோஸ் அளவைக் குறைக்க பிரெஞ்சு விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

புதுமையான கைக்கடிகாரம்

ஜப்பானில் உள்ள 'சீக்கோ' கைக் கடிகார நிறுவனம் புதுமையான கைக் கடிகாரத்தைத் தயாரித்துள்ளது. இந்தக் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டு காதருகே கொண்டு சென்றால் எலக்ட்ரானிக் குரல் நேரத்தைத் துல்லியமாகக் கூறுகிறது. பார்வையற்றவர்களுக்காகவே இந்தக் கைக் கடிகாரம் உருவாக்கப்பட்டுள்ளது.






பெரிய வாழ்த்து அட்டை!

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்திய அணிக்கு வாழ்த்துச் சொல்லும் வகையில் மிகப் பெரிய வாழ்த்து அட்டையை பிரிட்டானியா நிறுவனம் உருவாக்கி வருகிறது. இந்த வாழ்த்து அட்டையில் நாடு முழுவதும் உள்ள 370 பள்ளிகளில் இருந்து ஐந்து லட்சம் மாணவ, மாணவியர் கையெழுத்திடுகிறார்கள். 20 அடி உயரமும் 900 அடி நீளமும் உள்ள இந்த வாழ்த்து அட்டை லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெறவுள்ளது.


அழிந்து வரும் யானைகள்!



ஆப்பிரிக்க நாடுகளில் யானைகள் தந்தங்களுக்காக அதிகமாகக் கொல்லப்படுகின்றன. கென்யா நாட்டில் சட்ட விரோதமாக யானைகளைக் கொன்று 12,000 கிலோ தந்தங்களை எடுத்திருக்கிறார்கள். யானைகள் கொல்லப்படுவதைத் தடை செய்யும் விதத்தில் இத்தந்தங்களை அழிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

வெள்ளம்

தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டில் இந்த நூற்றாண்டிலேயே உலகில் வேறெங்கும் பொழியாத அளவிற்கு மழை பெய்துள்ளது. இந்தக் கடும் மழையால் நாட்டின் பல இடங்கள்




பாதிக்கப்பட்டுள்ளன.

விடுதலை!

முறையான அனுமதியின்றி பிராணிகளை வளர்ப்பது சட்டவிரோதமான செயல் ஆகும். இவ்வாறு அனுமதியின்றி திருப்பரங்குன்றத்தில் வளர்க்கப்பட்ட 60 மயில்கள் வனத் துறையினரால் மீட்கப்பட்டு பல்வேறு காடுகளில் விடப்பட்டுள்ளன.



கிளைடர் விமானம்!



வழக்கம்போல் சதுர வடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

1. படத்தில் காட்டியபடி தாளை இடமிருந்து வலப்புறம் மடியுங்கள்.

2. மடிக்கப்பட்ட பகுதியை மேலிருந்து கீழ் நோக்கி மடிக்கவும்.

3. மீண்டும் இரண்டாவது படமிருந்த நிலைக்குக் கொண்டு வரவும். கோடிட்ட பகுதியை மடித்து விடுங்கள்.

4. ஒரு கப்பல் சாய்ந்துள்ள தோற்றம் கிடைக்கும். மேல் முனை கீழ் முனையைத் தொடுமாறு மடியுங்கள்.

5. படம் 5-ல் காட்டியபடி கோடிட்ட பகுதிகளை மடிக்கவும்.

6. படம் 6-ல் காட்டியபடி இருபுறம் மேல் நோக்கி மடிக்கவும்.


7. இரண்டு பக்கமும் உள்ள இறக்கை போன்ற பகுதிகளை சிறிது விரித்து விடவும்.


இப்போது கிளைடர் விமானம் தயார். கையில் எடுத்து வேகமாக வீசுங்கள். விமானம் ஒரே சீராக தரையிறங்கும்.

Edited , printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

பிருந்தாவனம்

இரண்டு படங்களுக்கும் இடையே உள்ள ஐந்து
வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை: 1. பாட்டில், 2. குட்டியின் வால்,
3. நாயின் கண், 4. செயின்டாலர், 5. கிலுகிலுப்பை




''ஏதேனும் இரண்டு
கோணங்களைக் கூறு?''
''அரக்'கோணம்', கும்ப
'கோணம்' சார்!''
– கிருஷ்ணரத்னம்

**ஒளிந்திருக்கும்
உருவங்களைக்
கண்டு
பிடியுங்கள்.**



விடை: கொக்கு, புறா, கிளி, அணில்,
முயல், மான்

ஜோரா வீடு கட்டியாச்சு!
கதவு போட வேண்டாமா?



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * License
to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

